
# விபுலாநந்தம்



சுவாமி விபுலாநந்தர் திருவுருவச்சிலை

## திறப்பு விழா மலர்

**21 - 03 - 1992**

பழைய மாணவர் சங்கம்

இராமகிருஷ்ண மிஷன் இந்துக் கல்லூரி,

திருக்கோணமலை.

# விபுலாநந்தம்

மலர் ஆசிரியர்

திருமலை நவம்

1992

திருவுருவச்சிலை அமைப்புக் குழு
பழைய மாணவர் சங்கம்
தி/ இ. கி. மி. இந்துக்கல்லூரி
திருக்கோணமலை.

அச்சுப்பதிப்பு
ஸ்ரீ கணேச அச்சகம்
5, வித்தியாலயம் வீதி.
திருக்கோணமலை.



முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தரின், நூற்றாண்டு விழாவையொட்டி திருக்கோணமலை இ. கி. மி. இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினரால் ***21 - 03 - 92*** அன்று நிறுவப்பட்ட அடிகளாரின் திருவுருவச்சிலை.



# மலரின் உள்ளே


1. முத்தமிழ் வித்தகரின் திருவுருவச்சிலை
2. ஆசிச்செய்தி — சுவாமி ஆத்மகனாநந்தாஜி
3. வாழ்த்துச்செய்தி — சுவாமி ஜீவனாநந்தாஜி
4. நிகழ்ச்சி நிரல்
   (i) திருவுருவச்சிலை திறப்பு விழா 21-03-1992
   (ii) ஆய்வரங்கு 22-03-1992
5. திருவுருவச்சிலை அமைப்புக்குழு
6. பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள்
7. மலர் இதழ்களை நுகரமுன் — மலர் ஆசிரியர்
8. பழைய மாணவர் சங்கத் தலைவர் விளம்புகின்றார் — Dr. கு. ஹேமச்சந்திரா
9. விபுலாநந்த அடிகளின் நவீன இலக்கியப்போக்கு — செ. யோகராசா எம். ஏ.
10. சுவாமி விபுலாநந்தர் உலகின் முதல் தமிழ்ப்பேராசிரியர் — நா. புவனேந்திரன்
11. விபுலாநந்த அடிகளாரின் கவித்திறன் — எஸ். எதிர்மன்னசிங்கம்
12. விபுலாநந்தர் நூற்றாண்டுப்பணிகள் எவ்வாறு அமைய வேண்டும் — அன்புமணி
13. வெல்லுவோம் (கவிதை) — தாமரைத்தீவான்
14. இந்துக்கல்லூரி வரலாற்றில் சுவாமி விபுலாநந்தர் — சி. தண்டாயுதபாணி
15. விபுலாநந்த அடிகளின் கல்வி பற்றிய சில கருத்துக்கள் — செ. அழகரெத்தினம் எம். ஏ.
16. Swami Vipulananda — K. S. Sivakumaran
17. சிலை வடித்த எங்கள் சிற்பி — மலர் ஆசிரியர்

# மலர் இதழ்களை நுகரமுன்......

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தரை சர்வ உலகமும் நினைவு கொள்ளும் இவ்வேளையில் அடிகளாரின் திருவுருவச் சிலையை திருக்கோணமலை இ. கி. மி. இந்துக்கல்லூரி முன்றலில் திறந்து வைத்து அவ்விழாவையொட்டி சிறப்பு மலரொன்றை வெளியிட வேண்டுமென்ற தனது அடங்காத ஆர்வத்தை பழைய மாணவர் சங்கத்துக்கு முன்மொழிந்தவர் திருகோணமலை மேலதிக அரசாங்க அதிபர்திரு. என். புவனேந்திரன் ஐயா அவர்கள்.

முத்தமிழ் முனிவர் இந்துக் கல்லூரியின் அதிபராக இருந்து ஆற்றிய தொண்டை எக்காலமும் நினைவு கொள்ளும்வகையில் ஓர் சிலையை நிறுவி அதற்கு ஓர் விழாவை இந்த நூற்றாண்டு காலத்தில் செய்து முடிக்க வேண்டும் என்ற மேலதிக அரசாங்க அதிபரின் முன்மொழிவை எமது பழைய மாணவர் சங்கம் ஏற்றுக்கொண்ட அதே வேளை பழைய மாணவர் சங்கத் தலைவர் வைத்தியக் கலாநிதி கு. ஹேமச்சந்திரா அவர்கள் அச்சிலையை நிறுவுவதற்குரிய முழுப்பொறுப்பையும் செலவுகளுடன் ஏற்றுக்கொள்வதாக ஒப்புக் கொண்டு அந்த நிமிடத்திலிருந்தே சிலை நிறுவச் செயற்படத் தொடங்கியதை இந்த இடத்தில் நினைவு கொள்ளாமல் இருக்க முடியாது.

மேலதிக அரச அதிபர் என். புவனேந்திரன் தலைமையில் திருவுருவச் சிலை அமைக்க குழு ஒன்றை நிறுவி செயற்பட பழைய மாணவர் சங்கம் பின்னணியாக இருந்தது மலர் ஒன்றை வெளியிட வேண்டுமென்று நாம் அங்கலாய்த்துக் கொண்டிருந்த வேளையில் தான் இந்துக் கல்லூரியின் பழைய மாணவரும் திருகோணமலை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளருமான திரு. செ. சண்முகசுந்தரத்தின் நல்ல மனம் எமக்கு ஞாபகம் வந்தது அவரிடம் உதவி கேட்டபோது "ஓர் ஆக்க பூர்வமான முயற்சிக்கு நான் எதையும் செய்யத் தயாராக இருக்கின்றேன்" என்ற அன்பான சம்மதத்துடன் மலர் வெளியீட்டுப் பொறுப்பைச் சங்கம் ஏற்றுக் கொண்டதை நாம் பெருமையாக மனங்கொள்வதுடன் ப. நோ. கூ. ச. தலைவர், இயக்குநர் சபை, சங்க ஊழியர் அனைவரையும் எமது மனதுக்குள் நினைவு கொள்வதுடன் இம்மலரிலும் அவர்கள் உதவியைச் சொல்லி வைத்துப் பெருமைப்படுகிறோம்.

இந்த மலருக்கு விடயதானங்களை நல்கிய அறிஞர்கள், ஆசிச் செய்திகளை அனுப்பிவைத்த இ. கி. மி. சுவாமிகள், இம்மலரை அழகுற வடிவமைத்து அச்சிட்டுத் தந்த திருக்கோணமலை கணேச அச்சகத்தினர் அனைவருக்கும் எமது நன்றிகள்.

திருமலை நவம்
மலர் ஆசிரியர்

இராம கிருஷ்ண மிஷன் (கொழும்பு) தலைவர்

## சுவாமி ஆத்மகனாநந்தாஜி

## அவர்களின் வாழ்த்துச் செய்தி

மனிதனின் உள்ளத்திலே புதைந்திருக்கும் தெய்வீக ஆற்றலை வெளிப் படுத்துவதே சமயம் எனப்படும். ''சமயம் என்பது வெறும் வார்த்தைகளல்ல கருத்துக்களல்ல, அனுட்டான முறைகளல்ல, புத்தகங்களல்ல, வெறும் கட்டிடங்களும் அல்ல. சமயம் என்பது ஆன்மீக அனுபூதி'' என்கிறார் சுவாமி விவேகானந்தர். உண்மை, அன்பு, தியாகம், தூய்மை போன்ற உயர்ந்த பண்புகளை வெளிப்படுத்துவதே சமயத்தின் நோக்கம்.

சமயங்களிடையேயுள்ள வேறுபாடுகள் புறத்தளவே உள்ளனவையே தவிர அகத்தளவிலே அவை ஒரே உண்மையையே போதிக்கின்றன. அன்பு, புனிதம், தானம் முதலிய தெய்வீகப் பண்புகளைக் கொண்ட ஞானிகள் எல்லாச் சமயங்களிலும் தோன்றியுள்ளனர். இப்பண்புகள் எந்த ஒரு தனி மதத்தினருக்கோ அல்லது தனி மனிதருக்கோ சொந்தமல்ல. ஆகவே சமயங்களுக்கிடையே ஏற்றத்தாழ்வுகளைப் போதிப்பவர் அறிவீனர்களே. இப்பண்புகளை அடிப்படையாகக் கொண்டவரே தெய்வீகப் புருடராகக் கருதப் படுகிறார். அத்தகைய மனிதர்களை உடைய சமுதாயமே சிறந்த சமுதாயம். ஆகவே ஒரு சமுதாயமோ அல்லது நாடோ சிறப்பாக இருக்கவேண்டின் அதை சில சட்டங்களை இயற்றுவதன் மூலம் சாதிக்க இயலாது. அத்தகைய உயர்ந்த பண்புகளைக் கொண்ட மனிதர்களை உருவாக்குவதன் மூலம் தான் ஒரு நாடு உயர முடியும். இதுவே சுவாமி விவேகானந்தரின் கருத்து.

இந்த உயர்ந்த கருத்தை நடைமுறைப்படுத்த ஸ்ரீராமகிருஷ்ண இயக்கத்தைத் தோற்றுவித்தார் சுவாமி விவேகானந்தர். அந்த இயக்கத்தின் மூத்த துறவிகளிலே ஒருவர் தான் சுவாமி விபுலாநந்த அடிகள். தான் வாழ்ந்த காலத்தில் அறியாமையாலும், மூடநம்பிக்கைகளாலும் வாடிக் கிடந்த மக்களைத் தட்டியெழுப்பி ஒரு உயர்ந்த சமுதாயத்தை உருவாக்கப் பாடுபட்டவர் சுவாமி விபுலாநந்தர். எண்ணற்ற கிராமங்களில் பாடசாலைகளை நிறுவி அத்தகைய உன்னத கல்வியைப் போதித்தார் அவர். அதற்காகத் தனது வாழ்க்கையையே முழுவதுமாக அர்ப்பணித்து எதிர்காலச் சமுதாயத்திற்கு ஒரு நிரந்தரமான வழிகாட்டியாக விளங்குகிறார் அவர்.

இத்தகைய பெருமைமிக்க அடிகளுக்கு சிலைவடித்து, அவரது உயர்ந்த வாழ்க்கைக்கு ஒரு நிரந்தர நினைவாலயத்தை ஏற்படுத்தியுள்ள திருகோணமலை இ. கி. மி. இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்திற்கும், திருவுருவச்சிலை அமைப்புக் குழுவினர்க்கும், நன்றி பகிர்ந்து வாழ்த்துவது எனது கடமையாகும்.

இராம கிருஷ்ண மிஷன் (இலங்கைக்கிளை),
40, இராம கிருஷ்ண வீதி,
கொழும்பு - 6.

இறைபணியில்
சுவாமி ஆத்மகனாநந்தா

இராம கிருஷ்ண மிஷன் (மட்டுநகர்) தலைவர்

# சுவாமி ஜீவனானந்தாஜி

## அவர்களின் ஆசிச்செய்தி

சுவாமி விபுலாநந்தருடைய பன்முகப்பட்ட பணிகளை நாம் வெவ்வேறாக நோக்கினாலும் அவையாவும் இருளில் மூழ்கிக்கிடந்த ஒரு மக்கள் கூட்டத்தைத் தட்டி யெழுப்பி விழிப்புறச் செய்வதையே நோக்காகக் கொண்டவை.

படிப்பறிவின்றி பாரம்பரிய பண்பாட்டை மறந்து கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்ற நிலையிலிருந்த அன்றைய மக்களுக்கு வழிகாட்டுவார். யாரும் இலர், அகவிருளை நீக்குவார் யாரும் இலர், அந்நிய மாயையைப் போக்குவார் யாருமே இலர். இந்நிலையில் அவர்கள் பெருமைமிக்க தமது மொழியையும் சமயத்தையும் பண்பாட்டையும் இழந்துவிடும் பேராபத்திலிருந்தனர் பகவானின் பேரருளால் சுவாமி விபுலாநந்தர் மூலம் அப்பேராபத்து தவிர்க்கப்பட்டது.

சுவாமி விவேகானந்தரின் சேவைகள் அவரைக் கவர்ந்தன. தாழ்ந்து கிடந்த இந்திய மக்களுக்கு அவர் காட்டிய பாதை சுவாமி விபுலானந்தருக்கு ஆதர்ஸமாக விளங்கியது. அவரது அடிச்சுவட்டைப் பின்பற்றி இவரும் தன் பாதையை அமைத்துக் கொண்டார். தொண்டு செய்வதற்காகத் துறவு பூண்டார். அன்று அவர் செய்த அந்த மகத்தான தியாகமே இன்று நாம் அனுபவிக்கும் வாழ்க்கை வசதிகளுக்கு மூலகாரணமாகும்.

இவ்வாறு ஒரு யுகமாற்றம் ஏற்படுவதற்கு மூலகாரணமாக இருந்த சுவாமிகளை ஒரு யுகசந்தி என அழைப்பது மிகவும் பொருத்தமானதாகும்.

இராம கிருஷ்ணமடத் துறவியாக மாறிய சுவாமிகள் மட்டக்களப்புக்கு வந்து சிவானந்த வித்தியாலயத்தை நிறுவினார். அதைத் தொடர்ந்து கிழக்கிலங்கையில் பல பாடசாலைகளை நிறுவியதுடன் அவற்றை நிர்வகிக்கும் பொறுப்பினையும் ஏற்றுக் கொண்டார். வசதியற்றவர்களுக்கு இலவசக்கல்வி கிடைக்க வகை செய்தார். அனாதைகள் தங்கியிருந்து கல்வி கற்பதற்கு விடுதி வசதியும் ஏற்படுத்தினார்.

இன்று பல வசதிகள் நமக்குச் சுலபமாகக் கிடைக்கின்றன. அவர் வாழ்ந்த காலத்தில் நிலமை அப்படியிருக்கவில்லை. பாதையும் வெட்டிப் பயணம் செய்ய வேண்டிய நிலை அவருக்கு. நிதி சேர்ப்பது முதல் நிர்வாகம் செய்வது வரை எல்லாம் அவர் பொறுப்பாக இருந்தது. தனிஒருவனாகவே சகல பிரச்சனைகளுக்கும் அவர் முகம் கொடுக்கவேண்டியிருந்தது.

அந்நியமான ஒரு பகைப்புலனில் ஆட்சியாளருக்கு எதிரான மார்க்கத்தில் செல்ல வேண்டியிருந்ததால் பல சோதனைகளுக்கும் வேதனைகளுக்கும் மத்தியில் அவர் எதிர் நீச்சல் போடவேண்டியிருந்தது. ஆத்மீகபலம் ஒன்றே அவரை வழிநடாத்திச் சென்றது. இறைவன் அருளால் அவர் தனது பணியை இனிதே நிறைவேற்றி நமது எதிர்காலப் பயணத்துக்கு வழிவகுத்துச் சென்றுள்ளார்.

அதற்குப் பிரதியாக நாம் அவருக்கு என்ன செய்யப்போகின்றோம்? இதுவே அவரது நூற்றாண்டு விழாவில் நம் சிந்தனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டிய கேள்வியாகும்.


அவர் நமக்குச் செய்ததை நாம் நமது எதிர்காலச் சந்ததியினருக்குச் செய்ய வேண்டும். இதுவே அவருக்கு மிகவும் உவப்பான நன்றிக்கடனாக அமையும்.

அனாதைகளுக்கு வாழ்வளிப்போம். அசக்தர்களுக்கும் ஏழைகளுக்கும் ஆதரவளிப்போம். எந்தக் குழந்தையும் நமது குழந்தைதான் என்ற உணர்வுடன் அவர்களை வாழ வைப்போம்.

வையத்தே உயிர் எல்லாம் அவனுடைய பல்வேறு வடிவமாகும்
ஐயமில்லை அவற்றுக்குத் தொண்டுசெய்தல் அவனுக்குப் பூசையாகும்
தெய்வமதைத் துதித்தற்கு உயிர்நேயம் ஒன்றேதான் சிறந்தமார்க்கம்.
மெய்யிதனை உணர்ந்திடுதல் இறைவனுக்கு நாம்செய்யும் வழிபாடாகும்.

திருக்கோணமலை இ. கி. மிஷன் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் அடிகளாருக்கு திருவுருவச் சிலை நிறுவி விழா வெடுக்கும் இவ்வேளையில் அவர்கள் முயற்சி வெற்றி பெற வாழ்த்துகிறேன்.

சுவாமி ஜீவனானந்தா.



# திருவுருவச்சிலை திறப்பு விழா

## 21-03-1992 சனி மாலை 4.30 மணி

தலைமை.

திரு. நா. புவனேந்திரன்
(மேலதிக அரசாங்க அதிபர், திருக்கோணமலை)

★ மங்கள விளக்கேற்றல்.

★ கடவுள் வாழ்த்து.

★ திருவுருவச்சிலை திரைநீக்கம்.

சுவாமி ஆத்மகனாநந்தாஜி
*(இராம கிருஷ்ண மிஷன் கொழும்பு)*

★ வரவேற்புரை :

திரு. சி. தண்டாயுதபாணி
(அதிபர் இராம கிருஷ்ண மிஷன். இந்துக்கல்லூரி)

★ அறிமுகவுரை :

வைத்தியக்கலாநிதி கு. ஹேமச்சந்திரா
(தலைவர், பழைய மாணவர் சங்கம்)

★ தலைமையுரை :......

★ ஆசியுரை :

சுவாமி. ஆத்மகனாநந்தாஜி

★ விழாமலர் வெளியீடு :

சுவாமி. ஜீவனாநந்தாஜி
(இராம. கிருஷ்ண. மிஷன் மட்டக்களப்பு)

★ சிற்பிக்கு பொன்னாடை போர்த்தலும்,
பொற்கிழி வழங்கலும்.

திரு. சொ. கணேசநாதன்
(பிரதம செயலாளர் வட-கிழக்கு மாகாணசபை)

## சொற்பொழிவு

★ பேராசிரியர். அ. சண்முகதாஸ்
யாழ் பல்கலைக் கழகம்

★ கலாநிதி. சி. மௌனகுரு.
நுண்கலைப்பிரிவு கிழக்குப்பல்கலைக்கழகம்

★ திரு செ. யோகராசா
விரிவுரையாளர் கிழக்கு பல்கலைக்கழகம்

★ செல்வி. வ. கணபதிப்பிள்ளை
சாரதா இல்லம் இ.கி. மிஷன் கொழும்பு

★ திரு. க. தியாகராஜா
(தலைவர், சுவாமி விபுலாநந்தர்
நூற்றாண்டுவிழாச்சபை, மட்டக்களப்பு)

★ திரு. க. நடராசா
தலைவர் சுவாமி விபுலாநந்தர் சபை, திருகோணமலை

★ திரு. எஸ். எதிர்மன்னசிங்கம்
பிரதிப்பணிப்பாளர், கல்வி கலாசார அமைச்சு

★ திரு க. அருள் சுப்பிரமணியம்
செயலாளர் சுவாமி விபுலாநந்தர் சபை, திருகோணமலை

★ திரு இரா. நாகலிங்கம்
(அன்புமணி)

★ ஜனாப். ஓ. எஸ். எம். இஸ்மயில்
சட்டத்தரணி

★ வண. பிதா. பயஸ் பத்மராஜா அடிகளார்.

## கலையரங்கு

★ வீணையிசை: திருமதி சுலோஜனா தேவராஜனும் மாணவிகளும்

★ உரைச்சித்திரம்: இ. கி. மி. இந்துக்கல்லூரி மாணவர்கள்

★ நாட்டிய நாடகம்: ஸ்ரீ சண்முகவித்தியாலய மாணவிகள்

★ வில்லிசை: இ. கி. மி. இந்துக்கல்லூரி மாணவர்கள்

★ நன்றியுரை: திருமலை நவம்

## ஆய்வரங்கு

22-03-92 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி

தலைமை:-

சுவாமி ஜீவனாநந்தாஜி

★ மங்கள விளக்கேற்றல்

★ வரவேற்புரை - திருமலை நவம்

★ ஆசியுரை - சுவாமி ஆத்மகனாநந்தாஜி

★ தலைமையுரை -

ஆய்வுரைகள்

பேராசிரியர் - அ. சண்முகதாஸ் "அடிகளாரின் "இசைத்தமிழ்"

கலாநிதி - சி. மௌனகுரு "அடிகளாரின் சமுதாயநோக்கு"

திரு. செ. யோகராசா. M. A. "விபுலாநந்தரும் நாவலரும்"

திரு. செ. அழகரெத்தினம் "அடிகளின் கல்விச்சிந்தனைகள்"

திரு. சி. வன்னியகுலம். M. A. "அடிகளின் தேசிய நோக்கு"

அன்புமணி "துறவியின் தமிழ்"

நன்றியுரை திரு. கே. கே. தயாநிதி

# திருவுருவச்சிலை அமைப்புக்குழு

தலைவர்:

**திரு. நா. புவனேந்திரன்**

மேலதிக அரசாங்க அதிபர்

திருகோணமலை

செயலாளர்:

**திரு. திருமலை நவம்**

பிரதி அதிபர்

தி/உவர்மலை தமிழ் மகாவித்தியாலயம்.

**திரு. சி. தண்டாயுதபாணி**

அதிபர் இராம கிருஷ்ண மிஷன்

இந்துக்கல்லூரி

**திரு. கே. கே. தயாநிதி**

இலங்கை வங்கி

திருக்கோணமலை

**திரு. அ. அருணகுமார்**

பிரதி அதிபர்

தி/இ. கி. மி. இந்துக்கல்லூரி

**Dr. கு. ஹேமச்சந்திரா**

# இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் 1991–1992

| | |
|---|---|
| தலைவர்:- | வைத்தியக் கலாநிதி கு. ஹேமச்சந்திரா<br>M. B. B. S. (cey) |
| உபதலைவர்கள்:- | ஜனாப். ஃபஸீர் அமீர்<br>(ஆசிரியர்) |
| | திரு. திருக்குமரநாதன்<br>(சட்டத்தரணி) |
| செயலாளர்:- | திரு. சி. சந்திரசொரூபன்<br>பொறியியலாளர் |
| உபசெயலாளர்:- | திரு. எஸ். நவரத்தினம்<br>பிரதி அதிபர், தி/உவர்மலை தமிழ் மகா வித்தியாலயம். |
| பொருளாளர்:- | திரு. கே. கே. தயாநிதி<br>இலங்கை வங்கி |
| குழுஉறுப்பினர்கள்:- | திரு. க. அருள் சுப்பிரமணியம்<br>நிர்வாக உத்தியோகத்தர், கல்வித் திணைக்களம். |
| | திரு. அ. அருணகுமார்<br>பிரதி அதிபர் தி/இ. கி. மி. இந்துக்கல்லூரி |
| | ஜனப். ஏ. எஸ். ஹமீட் |
| | திரு. என். சிங்காரவேலு |
| | திரு. து. தவனேஸ்வரன்<br>மின் பொறியியலாளர் |
| | ஜனாப். எம். எம். ஜலால்டீன்<br>ஜே. வி. சி. உரிமையாளர் |
| கணக்குப் பரிசோதகர்:- | திரு. எல். பாலேந்திரன்<br>மக்கள் வங்கி |
| போஷகர்கள்:- | சுவாமி. ஜீவனாநந்தாஜி<br>இராம கிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு |
| | கௌரவ. எம். ஈ. எச். மஃறூப்<br>கப்பல், துறைமுகங்கள் இராஜாங்க அமைச்சர் |
| | திரு. கு. பாலச்சந்திர ஐயர்<br>ஓய்வு பெற்ற அதிபர் |
| | திரு. க. நடராஜா<br>பிராந்தியக் கல்விப் பணிப்பாளர், திருக்கோணமலை |
| | திரு. அ. சிவலோகநாதன்<br>ஓய்வுபெற்ற இந்துக்கல்லூரி அதிபர் |
| | திரு. எம். கே. சங்கரதாஸ் |



# பழைய மாணவர் சங்கத் தலைவர் விளம்புகிறார்

**Dr. கு. ஹேமச்சந்திரா**
*தலைவர், பழைய மாணவர் சங்கம்*
*தி/ இ. கி. மி. இந்துக்கல்லூரி*
*திருக்கோணமலை.*

கிழக்கிலங்கைக்கு பெருமை தேடித்தந்த முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் நூற்றாண்டை கொண்டாடு முகமாக, ஒரு முழு உருவச் சிலை ஒன்றை அவரின் முதல் அதிபர் பணி தொடங்கிய திருக்கோணமலை இராமகிருஷ்ண சங்க இந்துக்கல்லூரியின் உள்ளக மைதானத்தில் நிறுவும் வாய்ப்பு எமது சங்கத்திற்கு கிடைத்ததையிட்டு நாம் மிகவும் பெரு மகிழ்ச்சி அடைகின்றோம்.

இன்று தலை நிமிர்ந்து நிற்கும் இந்துக்கல்லூரி அன்னாரினால் தொடங்கப்பட்டு. வழி நடாத்தப்பட்டு அவர் புகழை பரப்பிக் கொண்டிருக்கின்றது இந்த ஸ்தாபனத்தின் பழைய மாணவர்கள் என்ற வகையில் நானும் எமது சக உறுப்பினர்களும் மிகவும் பெருமை அடைகின்றோம்.

இந்த சங்கமானது முதன் முதலாக 1975ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது அதன்பின் நீண்ட கால்மாக செயற்படாதிருந்த காரணத்தினால் 1982ம் ஆண்டில் அப்போதைய அதிபரும் கல்லூரியின் பழைய மாணவருமான திரு. அ. சிவலோகநாதனால் புனரமைக்கப்பட்டு கணிசமான அளவுக்கு தொழிற்பட்டது. அன்னாரின் விடாமுயற்சியினால் சங்கத்திற்கு தேவையான புதிய அங்கத்தவர்களை சேர்த்து முழுமையான ஒரு புது யாப்பு ஒன்றை தயாரித்தார். இந்தச் சங்கம் பல வழிகளிலும் கல்லூரியின் முன்னேற்றத்திற்கு உதவியது. எனினும் 1983ம் ஆண்டு தொடங்கிய இனக்கலவரத்தினால் சங்கம் தனது நடவடிக்கைகளை தொடர முடியாது தடைப்பட்டது.

தற்போதைய அதிபரான திரு. எஸ். தண்டாயுதபாணி அவர்களால் ஒரு உத்வேகம் அளிக்கப்பட்டு, மீண்டும் இச்சங்கம் புத்துணர்ச்சியுடன் 26-02-1991 இல் தனது பணியை தொடங்கியது. தற்போதைய சங்கமானது இலங்கையின் வேறு எந்த முன்னணி கல்லூரிகளினதும் ப. மா. சங்கங்களுக்கு நிகரான வழியில் தேவையான அளவு சகல துறைகளிலும் பிரபல்யமான அங்கத்தவர்ளையும் நடவடிக்கைகளையும் கொண்டது. இந்தச் சங்கத்தில் உள் நாட்டில் மட்டுமல்லாது வெளிநாடுகளிலும் உறுப்பினர்கள் உள்ளார்கள்.

இந்த சங்கமானது கல்லூரியின் வளர்ச்சிக்கு தேவையான சகல வழிகளிலும் தனது பங்களிப்பை செலுத்தி வருகின்றது. அதிபருக்கும், அவரின் நிர்வாகத்தினருக்கும் துணையாக இருந்து நீண்டகால குறையாக, இருந்த ஆரம்பப் பிரிவை தொடங்குவதற்கு பெரும் உதவியாக இருந்தது. கல்லூரியின் மிக முக்கிய தேவையான ஒரு மாணவர் விடுதி ஒன்றையும் அமைப்பதற்கும், விளையாட்டு மைதானத்தைப் பேணிப் பாதுகாக்கவும் சகல நடவடிக்கைகளையும் அது எடுத்து வருகின்றது.

09-01-92இல் இந்து சமய தமிழ் கலாசார அமுலாக்கல் அமைச்சர் கௌரவ P. P. தேவராஜ் அவர்களை பிரதம விருந்தினராக கொண்டு ஒரு பழைய மாணவர்களினது ஒன்று கூடல் நிகழ்ச்சியை முதன்முதலாகச் சிறப்பாக நடத்தியது. அத்துடன் உயர்தர வகுப்பில் கிழக்கிழங்கை சரித்திரத்தில் முதன்முதலாக நான்கு அதி விஷேட சித்திகளைப் பெற்ற செல்வன் S. ரவிச்சந்திரனைப் பாராட்டி விழா எடுத்து ஒரு தங்கப்பதக்கத்தையும் வழங்கியது. மேலும் இனி வரும் ஆண்டுகளில் முக்கிய பரீட்சைகளில் விசேடபெறு பேறுக்களை பெறும் மாணவர்களை கௌரவிக்கும் முகமாக ஒரு புலமைப் பரிசு நிதியம் ஒன்றையும் தொடக்க உள்ளது.

அடிகளாரின் புகழைப்பறைசாற்றிக்கொண்டிருக்கும் இந்துக்கல்லூரிக்கு மேலும் பெருமை சேர்க்கும் முகமாகத்தான் இந்த சிலை திறப்பு விழா இந்தச் சங்கத்தினால் நடாத்தப்படுகின்றது. கல்லூரியின் வளர்ச்சிக்கு எங்கள் சங்கமானது சகல வழிகளிலும் உறுதுணையாக இருக்கும் எனக்கூறி இந்த சிலை நிறுவுவதற்கு முக்கியமான பெரும் பங்களிப்பைச் செய்த எமது மேலதிக அரசாங்க அதிபர் நா. புவனேந்திரன் அவர்கட்கும் எமக்கு இத்தகைய சந்தர்ப்பத்தை தந்த கல்லூரி அதிபர் திரு. தண்டாயுதபாணி அவர்கட்கும், சிலையை முறையாக பீடத்தில் அமர்த்திய திரு. கா. விநாயகசோதி அவர்கட்கும் நினைவு மலரை வெளியிட நிதி உதவி செய்த திரு மலை கூட்டுறவு சங்க நிர்வாகத்தினருக்கும் இந்த விழாவை செவ்வனே நடாத்த உதவிய மற்றும் அனைவருக்கும் எம் அன்பார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்த சங்கம் மேலும் இது போன்ற பல பெருமைகளை உருவாக்கி கல்லூரியின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பாரென கூறி வாழ்க அடிகளாரின் நாமம் என வாழ்த்தி வணங்குகின்றோம்.

# சுவாமி விபுலானந்தர் உலகின் முதல் தமிழ்த் துறைப் பேராசிரியர்

நா. புவனேந்திரன்
(மேலதிக அரசாங்க அதிபர் திருக்கோணமலை)

தோன்றிற்புகழோடு தோன்றுக" என்ற வள்ளுவ வாக்குக்கு இலக்கணம் அமைக்கவென அவதரித்த முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தர் ஈழத்திரு நாட்டின் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த காரைதீவு எனும் கிராமத்தில் 1892ம் ஆண்டு அவதரித்தபோது இந்தப் பிஞ்சுச் சூரியன் எதிர்காலத்தில் உலகம் போற்றும் பேரறிஞனாக முத்தமிழ் வித்தகனாக உலகின் முதற் தமிழ்துறைப் பேராசிரியராக விளங்கப் போகின்றார் என்று சோதிடம் எழுத எந்தச் சோதிடனுக்கும் அன்று தெரியாமல் போய்விட்டது. அகத்தியம் தந்த அகத்தியன், கம்பன் வள்ளுவன் இளங்கோ, பாரதி எனும் செம்மை சான்ற புலவர்கள் போல் அடிகளாரும் எதிர்காலத்தில் திகழவிருக்கிறார் என்று எவருக்குமே புலப்படாமல் போனது ஆச்சரியமானவிடயமே

மதுரைத் தமிழ்ச் சங்கப் பலகையில் சரியாசனமிட்டு ஈழத்துப் பூதந் தேவனாரும் அன்று தமிழ் கவிதை படைத்தாராம். அதன் பின்னர் தற்கால வளர்ச்சிக்கு ஏற்ப பல்கலைக் கழகங்கள் தோன்றி, அங்கும் தமிழுக்கு முதலிடம் வழங்கப்பட்டபோது, அத்தகைய நேரத்திலும் ஈழத்து விபுலானந்தர் இந்தியப் பெரியார்களுடன் சரியாசனமல்ல, முதலாசனமே பெற்றார். தமிழ் நாட்டிலேயே முதல் முதல் பல்கலைக்கழத்தில் தமிழ்த்துறைக் கென தனியானதொரு பிரிவு அமைக்கப்பட்டு அதற்குப் பொறுப்பாக ஒரு தமிழ்த்துறைப் பேராசிரியரை நியமிக்க தமிழ் கூறும் நல்லுலகம் தயாரானபோது அதற்குத் தகுதியான வராக ஈழத்து விபுலானந்தரே முதன் முதலில் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதன் மூலம் சங்கப் பலகையில் சரியாசனம் பெற்ற ஈழத்துப் பூதன் தேவனாரையும் விட பல்கலைக்கழகத்தில் முதலாசனம் பெற்ற அடிகளார் ஒருபடி மிஞ்சிவிட்டார். என்றால் அது மிகையாகாது எனவேதோன்றிற் புகழோடு தோன்றுக என்ற வள்ளுவர் வாக்குக்கு இலக்கணம் வகுத்தவர் எனலாம்.

சுவாமி விபுலானந்தர் உலகத்திலேயே முதலாவது தமிழ்த்துறைப் பேராசிரியர் எனும் உன்னத ஸ்தானத்தை அடைந்துள்ளார், என்னும் உண்மையை ஏற்றுக்கொள்ள படித்தவர்கள் கூட இன்றும் தயங்குகின்றார்கள். 1931ம் ஆண்டு சிதம்பரத்து அண்ணாமலைச் செட்டியாரின் வேண்டுகோளின்படி சுவாமி விபுலாநந்தர் தமிழ்த் துறைப்பேராசிரியர் எனும் பதவியை ஏற்றபோது இந்தியாவின் எந்தப் பாகத்திலும் எந்தப் பல்கலைக்கழகத்திலும் தமிழ்துறைக்கென தனியானதொரு பிரிவோ அல்லது தனியானதொரு பேராசிரியர் பதவியோ இருந்ததில்லை. எனவே இந்தியாவில் முதற் தமிழ்த்துறைப் பேராசிரியர் எனும் தகமையை பெற்றதால் உலகத்திலேயே முதலாவது தமிழ்த்துறைப் பேராசிரியர் எனும் தகமையையும் கூடவே அடிகளார் பெறுகின்றார் என்பதில் சிறிதளவேனும் ஐயமில்லை.

1927ம் ஆண்டு இராமநாதபுரத்து அரசரது தலைமையில் மதுரையிலே ஒரு விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டது. அதனது நோக்கம் சிதம்பரத்தில் ஓர் பல்கலைக்கழகம் வேண்டுமா? என்பதை ஆராய்ந்து ஓர் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமென்பதே. அக்குழுவின்முன் மதுரையில் ஓர் பல்கலைக்கழகம் வேண்டும் என்ற கருத்தை வென்றெடுக்க ஒருவரை நியமிக்கவென சென்னைப் பல்கலைக்கழகம் நினைத்த

போது இந்தியாவிலே எத்தனையோ தமிழறிஞர்கள், வல்லுனர்கள், விரிவுரையாளர்கள் இருந்தபோதும் அவர்களை விட்டுவிட்டு முதல் மதுரைத் தமிழ்ப் பண்டிதரான சுவாமி விபுலானந்தரையே சென்னைப் பல்கலைக்கழகம் தேர்ந்தெடுத்து அழைத்தது. இதுவே அடிகளாரின் மேன்மையையும் கல்விச் சிறப்பையும் துலாம்பரமாக எடுத்துக்காட்டுகின்றது. இக்குழுவின்முன், முதல் முதலாக சாட்சியமளித்த பெருமையும் மெது அடிகளாரையே சாரும். அது மட்டுமன்றி இக்குழு சிதம்பரத்தில் ஓர் பல்கலைக்கழகம் வேண்டுமென தனது விசாரணையின் முடிவில் வேண்டுகோள் விடுப்பதற்கு அடிகளாரின் பரிந்துரைப்பும் அவர் காட்டிய ஆதாரங்களுமே கணிசமான பங்கைச் செலுத்தின என்பதற்கு ஆதாரமாக அப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறைப் பேராசிரியர் பதவியை அடிகளர்குக்கே வழங்கியதன் மூலம் தெளிவுபடுத்தப்பட்டது.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஆரம்பிப்பதற்கு ஆணிவேராக இருந்த சேர் அண்ணாமலைச் செட்டியார் அப் பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ்த் துறைப் பேராசிரியர் பதவியை ஏற்கும்படி சுவாமி விபுலானந்த அடிகளாரையே கேட்டுக்கொண்டார். அவரது வேண்டுகோளுக்கிணங்க ஈழத்து விபுலானந்தரும் 1931ம் ஆண்டு ஆடி மாதத்தில் தமிழ்த் துறைப் பேராசிரியர் எனும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பதவியை ஏற்று கிழக்கிலங்கை காரைதீவை உலக வரலாற்றுடன் இணைந்தது மட்டுமன்றி தமிழ் இலக்கிய வரலாற்றிலும் முதற் தமிழ் பேராசிரியர் என்ற பெருமைமிக்க அந்தஸ்த்தை தேடிக்கொண்டார்.

இந்தியாவிலே அண்ணாமலைப் பல்கலைக்கழகந் தான் முதன் முதல் தமிழ்த் துறைக்கென தனியானதொரு பிரிவை உருவாக்கி அதற்கென தனியானதொரு தமிழ்ப் பேராசிரியரையும் நியமித்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அடிகளார் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதல் தமிழ்த் துறைப் பேராசிரியர் எனும் பதவியை ஏற்கும்போது சென்னைப் பல்கலைக்கழகத்திற் கூட அக்காலத்தில் தமிழிற்கு தனியான பிரிவோ தனியானதொரு பேராசிரியர் எனும் பதவியோ இருக்கவில்லை. எனவே அடிகளார் இப் பெருமைமிக்க பதவியை ஏற்கும்போது இவருக்குச் சம்மாக எவருமே இத்தகையதொரு பேராசிரியர் பதவியை இந்தியாவில் எந்தப் பல்கலைக்கழகத்திலும் வகிக்கவில்லை. எனவே எமது அடிகளாரே உலகின் முதலாவது தமிழ்த்துறைப் பேராசிரியர் எனும் பதவியை வகித்து தமிழ்த்துறைக்கும் ஈழத்துக்கும் பெருமை தேடித்தந்தார் எனலாம்.

அடிகளார் வாழ்ந்த காலத்திலும், அதற்கு முன்னரும் ஏராளமான தமிழறிஞர்கள் தமிழ்நாட்டில் வாழ்ந்தார்கள், என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் அடிகளார் ஒரு பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைப் பேராசிரியர் எனும் பதவியை முறைப்படி ஏற்ற போது இவருக்குச் சமமாக தமிழ்த்துறைப் பேராசிரியர் எனும் பதவியை எவரும் எந்தப் பல்கலைக்கழகத்திலும் அந்தக்காலத்தில் ஏற்றிருக்கவில்லை என்பதே முக்கியமான உண்மையாகும். இவர் காலத்தில் வாழ்ந்த ரா. பி. சேதுப்பிள்ளை சுவாமி விபுலானந்தரின் கீழ் உதவி விரிவுரையாளராக கடமையாற்றினார். சோமசுந்தர பாரதியார் அடிகளாரின் பின்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியரானவர். தே. பொ மீனாட்சி சுந்தரனார் 1944ம் ஆண்டிலேயே அண்ணாமலைப் பல்கலைக்கழக பேராசிரியரானவர். இராகவையங்கார் 1944ம் ஆண்டிலேயே திருவிதாங்கூர் பல்கலைக்கழகத்து தமிழ்த்துறைப் பேராசிரியரானவர். ச. வையாபுரிப்பிள்ளை 1951ம் ஆண்டில்தான் திருவிதாங்கூர் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் பதவி பெற்றார். டாக்டர் ராசமாணிக்கனார் மதுரைத் தியாகராஜக் கல்லூரியிலேயே தமிழ்த்துறைத் தலைவராக இருந்தார்.

எனவே அடிகளாரின் காலத்தில் வாழ்ந்த எவரும் 1931ம் ஆண்டில் அண்ணா மலைப் பல்கலைக்கழகத்தில் அடிகளார் தமிழ்த்துறைப் பேராசிரியர் பதவியைப் பெற்ற போது அதைப் போன்ற ஒரு பதவியை பெற்றிருக்கவில்லை. சுவாமி விபுலானந்தர் தமிழ்ப் பேராசிரியர் பதவியை வகித்த பின்னரே இந்தியாவிலே ஏனைய அறிஞர்கள், அப் பதவியை பல்கலைக்கழகங்களில் பெற்றார்கள். எனவே தமிழ் கூறும் நல்லுகம் தமிழ் பேராசிரியர் ஒருவரை பல்கலைக்கழகத்தில் நியமிக்க முனைந்த பொழுது இந்தியா வில் பரந்துகிடந்த எத்தனையோ தமிழ் அறிஞர்களை விட்டுவிட்டு ஈழத்து விபுலானந் தரையே தேர்ந்தெடுத்தார்கள் என்றால் எமது அடிகளாரின் பெருமை உலகளாவியது. என்பதில் எவருக்கும் அபிப்பிராயபேதம் இருக்க முடியாது.

எனவே எமது ஈழத்து சுவாமி விபுலானந்தரே உலகில் முதல் தமிழ்த்துறை பேராசிரியர் என்பதில் எள்ளளவேனும் ஐயமில்லை.



# வெல்லுவோம்!

1. கிழக்கு வான் தந்த வெள்ளி!
   கிடைத்திடாத் தமிழர் சொத்து!
அளக் கொணாக் காரை தீவால்
   அனைத்து நாட்டுக்கு மானோன்!
முழக்கியே பொழிந்த மேகம்!
   முத்தமிழ் அளந்த வள்ளல்!
விளக்கிடும் கதிரின் வீச்சு!
   வித்தகன் விபுலா நந்தன்!

2. பழந்தமிழ் புதுக்கும் சிற்பி;
   பாப்புனை புலவர் ஏறு!
இழந்த நல் இசையை மீட்டோன்!
   எங்கணும் பள்ளி செய்தோன்!
வழங்கிடும் கலைகள் ஆய்ந்தே
   வாழ்த்தினோன் தமிழணங்கை!
களங்க மில்லாத மேலோர்
   கண்டநம் விபுலாநந்தன்!

3. அன்னவன் நூற்றாண்டில் நாம்
   அனைவரும் அவன்பேர் ஆய்வால்
சொன்னவை முழுதும் தேர்ந்தே
   தூய நம் உள்ளத் தேற்றுக்
கன்னலாம் பாலாம் - தேனாம்
   கனிபிழி சாறாம் எங்கள்
முன்னைய தமிழைக் காப்போம்
   முத்தமிழ் நந்தன் போலே!

4. கலை வளர்த்திடுவோம் - கற்போம்!
   கல்விதான் செல்வம் என்போம்!
சிலை எடுத்திடுவோம்! மண்ணில்
   திரு விழாப் பலவும் காண்போம்!
நிலையுணர்ந்திடுவோம்! நன்னூல்
   நினைவுடன் நாட்டில் யாரும்
விலைமதிக் கொண்ணாத் தொண்டால்
   வெல்லுவோம் - நந்தன் வாழ்க!

'தாமரைத் தீவான்'

# விபுலானந்த அடிகளாரின் நவீன இலக்கிய நோக்கு

செ. யோகராசா எம். ஏ
(விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக் கழகம்)

அடிகளார், மதுரைத் தமிழ்ச் சங்கம் நடாத்திய பண்டிதர் தேர்விலே சித்தியடைந்து ஈழத்தின் முதற் தமிழ்ப் பண்டிதர் என்ற பெருமைக்குரியவர், தமிழ்ப் புலவருமாவர். இவை பலருமறிந்தவை தமிழ்ப் பண்டிதர்கள் தமிழ்ப் புலவர்கள் என்போர் நவீன இலக்கிய முயற்சி ளை வரவேற்பவரல்லர் என்பதும் புதியதொரு விடயமன்று பல விடயங்களிலும் முன்னோடியாக விளங்கும் அடிகளார் நவீன இலக்கியம் பற்றி எத்தகைய நோக்குடையவராக விளங்கினார் என்று சிந்தித்துப் பார்ப்பதும் அவசியமானது.

நவீன கவிதை தொடர்பாக அடிகளார் நோக்கு யாது? இதுபற்றித் தெளிவுற ஏற்றதொரு உரைகல் உள்ளது. நவீன கவிதையின் பிதா மகனாகிய பாரதியாருக்கு அடிகளார் கொடுக்கும் வரவேற்பு எத்தகையதென்று கண்டறிய முற்படுவதே அதுவாகும். இவ்விடத்தில் அடிகளார் காலத்தைச் சேர்ந்த ஆய்வாளரும் ஆர்வலரும் பாரதியை எத்தகைய கோணங்களில் காண முற்பட்டனர் என்று நோக்குதல் வேண்டும். அத்தகையோரைப் பின்வருமாறு வகுத்துக் கொள்ள இயலும். (எனினும். இத்தகைய வரையறை நெகிழ்ச்சியுடையது என்பதனை மனங்கொள்க.)

(அ) 'வேதாந்த சிமிழ்' என்பதற்குள் அடைப்போர் (ராஜாஜி, பி. ஸ்ரீ. முதலானோர்)

(ஆ) தேசியக் கவியாக - மகா கவியாக - காண முற்படுவோர் (வ. ரா. குழுவினர்)

(இ) சமூக சீர்திருத்தவாதியாகவோ பொதுவுடைமை வாதியாகவோ காண்போர் (தி. மு. குழுவினர்; ஜீவா. ஆர். கே. கண்ணன், சிதம்பர ரகுநாதன் முதலானோர்.

(ஈ) இரசனை நோக்கில் அணுகுவோர் (கு. ப. ரா. சிட்டி)

இங்கு இருவிடயங்கள் அழுத்தப்படவேண்டியவை, வ. ரா. முதலிய ஒரு சிலரைத் தவிர, மேற்கூறிய குழுவினர் பலரும் மேற்கூறிய விடயங்களை பாரதி மறைவுற்று நீண்ட காலத்தின் பின்னரே வற்புறுத்தத் தொடங்கினர் என்பது ஒன்று. இவர்கள் பலரும் தமிழ்ப் புலவரோ, பண்டிதரோ அல்லர் என்பது. மற்றொன்று இன்னொரு விதமாகக் கூறின், பி. எஸ், ராமையா கூறுவது போன்று

அன்றைய தமிழ்ப் பேராசிரியர்களும் புலவர்களும் பாரதியாரை ஒரு கவி என்றே ஒப்புக்கொள்ள வில்லை'' (மணிக்கொடி காலம் ப, 7. 3) இத்தகைய பின்னணியில் அடிகளார் பாரதியைப் பல்வேறு கோணங்களில் — தேசாபிமானியாக, சமரசவாதியாக, தமிழுணர்ச்சி மிக்கவனாக, இயற்கையைக் கண்டு புளகாங்கிதம் அடைபவனாக — கண்டு கொள்கின்றார். பேராசிரியர் கா. சிவத்தம்பியின் வார்த்தைகளில் கூறுவதானால் ''பாரம்பரியத் தமிழ்ப் புலமை சார்ந்த பண்டிதர்கள் மத்தியில் பாரதியை அவர் மறைவு முதற்கொண்டே இனங்கண்டு ஏற்றுக்கொண்டவர்களாக நமக்குத் தெரிவது பாரதியின் பால்ய கால நண்பர் நாவலர் சோமசுந்தர பாரதியாரும் சுவாமி விபுலாநந்தரும் மட்டுமே'' (பாரதி - மறைவு முதல் மகாகவி வரை; பக் 77) நவீன கவிதை தொடர்பாக, அடிகளார் நோக்கு எத்தகையதென்பது இது வரை கூறியவற்றிலிருந்து புலப்படுகின்றதல்லவா?

நவீன நாடகம் பற்றி இனி அவதானிப்போம். விபுலாநந்தர் பற்றிய ஆய்வுகளில் ஈடுபடுவோர் ஆரம்ப காலத்தில் நாடகங்களை அவர் அவ்வளவு தூரம் வரவேற்றவரல்லர் என்பதனை அறிந்திருப்பர். அடிகள் ஒருதடவை எழுதினார்:

> ''.........சிற்றளவாக உண்டபொழுது சுகத்தைத் தருகிற மருந்தினைக் கவளங் கவளமாக உண்டால் அம் மருந்தே நஞ்சாவதுபோல நாடக மேடை முதலியன பொதுவாக நஞ்சாய் முடிகின்றன. ஆதலால், புராணபடனம், ஹரி கதை முதலிய சற்காலக்ஷேபங்களுள் நமது நாட்டில் நாடக மேடையும் சினிமாக் காட்சியும் வேண்டவே வேண்டாம். ஆனால். நன்னெறி தவறா நாடகங்களில்லையோ அவற்றைப் போய்ப் பார்த்தல் கூடாதோ வெனில் ஓர் ஆண்டில் ஒருமுறையோ அல்லது இரு முறையோ பார்ப்பதனால் தீமை நேரிடாது, அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு. இழிவுற்ற பாடல்களைப் பாடிக்கொண்டு பெண்களும், ஆண்களும் ஒருங்கு தோற்றி மானங்கடந்த சல்லாப மொழிகளைப் பேசுகிற நாடக மேடை தூயநெறி நிற்றோருடைய உள்ளத்தையுங் கலைத்து தீய நெறியிற் செலுத்துவது ஆதலினால் அதை முற்றாகத் தவிர்ப்பதே முறை''
>
> (அருநிதியம் விலை சரசம் 1923)

இந்நீண்ட பகுதி, நாடகம் பற்றிய அடிகளாரின் கருத்துகளைத் தெளிவுபடுத்துகின்றது. அதன் மேலும் விளக்க வேண்டுவதில்லை; சில வறையறைக்குள் ஓரளவு ஏற்றுக்கொண்டார் அவ்வளவே பின்னர்

ஆயினும் பின்னர் அடிகளார் நோக்கு நன்கு செழுமையுற்றது பேராசிரியர் க. கணபதிப் பிள்ளையின் நாடகங்கள் பற்றிப் பாராட்டி பின்வருமாறு மடல் எழுதுகின்றார்;

> "......நானாடகமும் 'காதலி ஆற்றுப்படை'யும் கிடைத்தன முற்றும் படித்து மகிழ்வுற்றேன் 'பொருளோ பொருள்' எனப் பெயரிய மற்றுமொரு நாடகம் அண்மையில் அரங்கேறியதாக ஈழகேசரியிற் படித்தேன். மட்டக்களப்பு வழக்கு மொழியினையும் ஓரிரண்டு நாடகங்களிலே படம் பிடித்து வைப்பது நன்று......"
>
> ('சோழ மண்டலத்துத் தமிழும் ஈழ மண்டலத்துத் தமிழும் - 1941)

மேற்கூறிய பகுதியில் நாடகம் பற்றிய நோக்கு மட்டுமன்றி, இன்னொரு விடயமும் வெளிப்படுகின்றது. காதலி ஆற்றுப்படை சங்ககால ஆற்றுப்படை மரபினைப் பின்பற்றுவதன்று; முற்றிலும் புதியது என்பதும், இத்தகைய ஆற்றுப்படையையும் அடிகளார் பாராட்டுகின்றார் என்பதும் எமது கவனத்திற்கொள்ளப்பட வேண்டியவை அல்லவா?

அதுமட்டுமன்று இன்னொரு விடயமும் குறிப்பிடத்தக்கது பாடசாலை மாணவர்களுக்கு நாட்டார் பாடல்கள் கற்பிப்பதை அடியோடு புறக்கணிக்கின்ற ஆசிரியர் குழாம் இன்றுமுள்ளது. இத்தகைய சூழலில், பண்டிதர் மயில்வாகனம் பேச்சு மொழி வழக்கினையும், வரவேற்க முன் வந்துள்ளமை வியப்பளிக்கவே செய்கிறது. ஒருதடவை, அடிகளார், ஜனாப் ஏ. எம். ஏ. அஸீஸ் அவர்களுக்கு பின்வருமாறு கூறியிருந்தமை இத்தொடர்பில் குறிப்பிடத்தக்கதே,

> "நவயுகத்தின் போக்கிலும் முயற்சி மிகுதியிலும் நம்முடைய பழஞ் செல்வங்களை யாம் மறந்து விடலாகாது. நாட்டுப் பாடல்களையெல்லாம் மக்கள் மறந்துவிடுமுன் அவற்றைத் தொகுத்து வெளியிட வேண்டும்.
>
> (ஈழமணி - மலர், 1948

நாவல் இலக்கியமும் ஆரம்பத்தில் அடிகளாரால் வரவேற்கப்பட்டிருக்காது என்பது தெளிவு. உரையாடற் பாணியிலமைந்த ஒரு கட்டுரையில் இவ்வாறு குறிப்பிட்டார். அடிகளார்;

> ......"நாடகத் தினுசு வேணுமானாற் பந்தயங் கூறிய சந்தவேள் சரிதையிருக்குது, பார்சி அல்லி அர்ஜுனா இருக்குது இன்னும். எத்தனையோ இருக்குது. நாவல்ஸ்

இருக்குது......'' என்று முடித்தான். 'நல்லது எனக்கு நாவல்ஸ், நாடகம் வேண்டாம். தோத்திரப் புத்தகங் களை எடுத்துக் காட்டு' என்றேன்......''.

(அருநிதியம் விலை சரசம்)

இத்தகைய எண்ணங்கொண்ட அடிகளாரின் நோக்கும் போக்கும் பிற் காலத்தில் மாற்றம் எய்திய யாழ்ப்பாண மறுமலர்ச்சிச் சங்கக் கூட்டமொன்றிலே உரையாற்றும் பொருட்டு சென்ற அடிகளார் அங்கு பேசியதன் ஒருபகுதி இங்கு எடுத்தாளத் தக்கது. அது பின்வருமாறு

''சுவாமிகள் தமிழின் மறுமலர்ச்சிபற்றி எவ்வளவு பரந்த நோக்கம் கொண்டிருந்தார்களென்பது மறுமலர்ச்சிச் சங்கத்தில் மறுநாள் அவர்கள் வெளியிட்ட, கருத்துகள் மூலம் நன்கு தெரிந்தது மறுமலர்ச்சிச் சங்கத்திலுள்ள இளம் எழுத்தாளர்களுக்குச் சுவாமிகள் சொல்லிய புத்தி மதியை அவர்கள் ஒருபோதும் மறக்கமாட்டார்கள். நீங்கள் உங்கள் மனோ தர்மத்தின்படி நன்றாக எழுதுங் கள். புதியன புதியனவாக எழுதித் தமிழை வளருங்கள் ஆனால் மற்றவர்களைக் கண்டிக்கத் துணியாதீர்கள். சொந்த மண்மணம் வீசும் சிறு கதைகளையும் நாவல் களையும் அதிகமாக எழுதுங்கள். எழுத்தில் எப்போதும் சொற் செட்டும் இலக்கணமும் கருத்து ஆழமும் இருக்க வேண்டியது பிரதானம்......''

(ஈழமணி மலர் - 1948)

(கீழ்க்கோடு எம்மால் இடப்பட்டது) மறுமலர்ச்சிக் குழு எழுத்தாளருள் ஒருவரான அ. செ. முருகானந்தனே தமது கட்டுரை யொன்றில் (அறிவாளி) இவ்வாறு எழுதியிருந்தார்.

நவீன இலக்கியம் பற்றி அடிகளாரின் நோக்கு எத்தகைய தென்பது இதுவரை எடுத்துக் காட்டியவற்றிலிருந்து தெளிவாகியிருக் கும் என்றே நம்புகின்றோம். நவீன ஆங்கிலக் கல்வியும் பன்மொழிப் புலமையும், கூர்ந்த அறிவும், தூரதிருஷ்டியான பார்வையும் அடி களாரிடம் சங்கமித்திருந்தது. இதன் விளைவாகவே நவீன இலக்கியம் பற்றிய அடிகளாரின் நோக்கு கால ஓட்டத்தில் செழுமை எய்தியது. நவீன இலக்கியங்கள் யாவற்றையும் ஏற்றுக்கொள்ளும் ஆரோக்கிய மான நிலையினையும் தோற்றுவித்தது எனலாம். இறுதியாக ஒன்று தமிழ் மட்டுமே கற்ற பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களும் நவீன இலக்கியத்தின் பால் நாட்டங்கொண்டிருந்தவர். இவ்விதத்தில் அடிகளாரையும் பண்டிதமணியையும் ஒப்பிட்டுப்பார்ப்பது ஆர்வலருக் குச் சுவைபயக்கும்.

# "விபுலாநந்த அடிகளாரின் கவித்திறன்"

எஸ். எதிர்மன்னசிங்கம்

கவிதை இயற்றுவதில் மிகப் புலமை படைத்தவராக அடிகளார் விளங்கினார். இதனை,

"திறமான யாழ்நூலையாக்கித்தந்தான்.
தித்திக்கும் தமிழ்ப்பாடல் யாத்துவைத்தான்.
நறை தோய்ந்த கவிவாணன் விபுலானந்தன்.
நாட்டுக்கும் அவனுக்கும் வணக்கம் சொன்னோம்.

என்று வரும் பாடல் நன்குணர்த்துகின்றது. இதுவரை கிடைக்கப் பெற்ற அடிகளாரால் படைப்பட்ட பாடத்தொகுதிகளின் தலைப்புக்கள் ஆய்வுகளை மேற்கொள்ள வசதியாக கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

1. அன்பு.
2. இமயமலைச்சாரலில்.
3. இமாசலயாத்திரை. (1947) ஈழகேசரி.
4. ஈசனுவக்கும் இன்மலர். (1923) இ. கி. வி.
5. உற்பத்தி முதல்வன்.
6. கங்கையில் விடுத்த ஓலை. (1943) த. பொ.
7. 'கருமயோகம்' தொகுத்துரைச் சூத்திரங்கள். (1934)
8. கீத்சு நூற்றாண்டு விழாப்பாடல். (1922)
9. குருவணக்கம் (1915) கணேச தோத்திர பஞ்சகம்.
10. கோயில். (1923)
11. கோவைக்கலம்பகம். (கைப்பிரதி)
12. சம்பந்தமூர்த்தி நாயனார். (கைப்பிரதி)
13. சீர்கொள் 'நல்லைச் செழும்பதி சேர்மினோ' (1920) இ. சா.
14. தமிழ்நாட்டு நவமணிகள். (1924) இ. வி. வி.
15. தாயின் மறைவு குறித்துப் பழைய கையாறு நிலைச் செய்யுட்கள் (கைப்பிரதி)
16. தெய்வப்பாடல்கள். (கைப்பிரதி)
17. தேவவாணி. (1933) இ. கி. வி.
18. நாச்சியார் நான்மணிமாலை. (1947)
19. நாவலர் மெய்க்கீர்த்தி மாலை. 1944) ஈழகேசரி.
20. நீரரமகளிர் இன்னிசைப்பாடல் (1941) த. பொ.

21. பராசக்தி:
22. பாண்டித்துரைத்தேவர் மறைவு குறித்துப் பாடிய பாடல்கள்.
23. பூஞ்சோலைக் காவலன் (1922) (1923) செ. த.
24. பூதங்களைத் தொழுது பூதநாதனை வழிபடல். (1942) இ. வி. வி.
25. பெருந்தேவபாணி. (1946)
26. மகாலிங்க சிவத்தின் மலர்நிகர் மாட்சி. (1941) இ. சா. வ. ம.
27. மஹாலட்சுமி தோத்திரம் (1924) செ. த.
28. மலர்மாலை. (1923)
29. வாழ்த்து.
30. விவேகானந்த பஞ்சகம். (1923) இ. வி. வி.
31. ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரின் உபதேசத்திரட்டு. (1920) இ. வி. வி.

இக் கவிதைகள் எல்லாம் எளிமையும், இனிமையும் கலந்து படித்துச் சுவைக்கக் கூடியனவாகவுள்ளன. கூடிய பாடல்கள் சமய சம்பந்தமானவையாகும். அத்தோடு இலக்கியம், பொதுவான விடயங்கள் என்பனவும் இடம் பெற்றுள்ளன. விபுலானந்த அடிகளாரின் நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடும் நாம் அவரது ஆக்கப்பணிகளை வெளியுலகு நன்குணர்ந்து கொள்ளச் செய்ய வேண்டியது முக்கிய கடப்பாடாகும்.

எஸ். எதிர்மன்னசிங்கம்.
உதவிப் பணிப்பாளர்.
கலாசார அலுவல்கள்.

# விபுலாநந்தர் நூற்றாண்டுப் பணிகள் எவ்வாறு அமைய வேண்டும்

— அன்புமணி —

விபுலாநந்தர் நூற்றாண்டு தொடர்பாக அவருடைய நினைவை நிலை நிறுத்தும் முயற்சியில் நினைவு விழாக்களும், நினைவுச் சொற்பொழிவுகளும், நினைவிச் சின்னங்களும், நினைவு மண்டபங்களும், நூல் வெளியீடுகளும், விழா மலர்களும் நமது சிந்தனையில் தொடராக வருகின்றன. இவைகள் நல்ல பணிகளே, வருங்காலச் சந்ததியினர் சுவாமி விபுலாநந்தரைப் பற்றி அறிந்து கொள்வதற்தும். கடந்த கால வரலாற்றில் அவருடைய பங்களிப்பைப் புரிந்து கொள்வதற்கும் இவை பெரிதும் உதவும். அதே சமயம் அவருடைய வாழ்க்கையை ஊடுருவிப் பார்த்தால் அவர் சமூகத்திற்காகவும், மக்களுக்காகவும் செய்த தியாகத்தை உணரவும். அதன் வழி நின்று செயற்படவும் நாங்கள் வேறு சில பணிகளைக் கருத்தில் கொள்ள வேண்டியது அவசியம்.

சுமார் ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் வாய்ப்பும் வசதிகள் எதுவும் இல்லாத சூழ். நிலையில் விபுலாநந்தர் ஒரு ஒளி விளக்காக தோன்றினார். மிகவும் இளம் வயதிலே அக்காலத்தில் சமூகத்தில் ஒருவர் பெறக்கூடிய பெருமைகளையெல்லாம் அவர் பெற்றார் பெருமைக்குரிய பதவிகளான ஆசிரியர் பதவி, அதிபர் பதவி, பண்டிதர் பட்டம். கேம்பிரிஜ் பட்டம், விஞ்ஞான பட்டதாரிப் பட்டம் முதலியவற்றையெல்லாம் அவர் பெற்றிருந்தார். இருந்த போதிலும் அவற்றைப் பயன்படுத்தி அவர் தன்னுடைய வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்ளவோ. தன்னுடைய உற்றார், உறவினர்களை மேம்படுத்துவதற்கோ முயற்சிக்கவில்லை, மாறாக' தன்னுடைய சமுதாயத்தில் மக்கள் அனுபவிக்கும் துன்ப. துயரங்கள் பற்றிச் சிந்தித்தார். அந்நியர் ஆட்சியின் நெருக்குவாரத்தாலும், அதை உணர முடியாத மக்களின் அறியாமையினாலும் நமது சமுதாயம் மிகவும் கீழ் நிலைக்குப் போய்க் கொண்டிருப்பதையும் கண்ணுற்றார். இந்த அவலநிலை பற்றி ஆழமாக சிந்தித்தார். இம் மக்களுக்கு ஏதாவதொரு வகையில் விமோசனத்தைத் தேடிக் கொடுக் வேண்டுமென எண்ணிணார். இந்தச் சிந்தனை அதன் விளைவாக முகிழ்த்த செயற்பாடுகள் யாவும் நாம் மிகவும் கருத்தூன்றிச் கவனிக்க வேண்டிய விடயங்களாகும்.

இந்த மக்களை மீட்சிப் பாதைக்கு இட்டுச் செல்வதற்கு ஒரே வழி அவர்களுடைய அறியாமையும், வறுமையையும் அகற்றுவதற்கான செயற்பாடுகளே என்பதை அவர் உணர்ந்தார். ஆனால் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு அந்த நாட்களில், ஆட்சியாளர்கள் ஒத்துழைப்போ சமூகமட்ட நிறுவனங்களின் உதவிகளோ பெறக்கூடிய நிலை இருக்கவில்லை. எனினும் அடிகளார் மனம் சோர்ந்து போகவில்லை. இறைவனின் திருவருள் ஒன்றையே துணை கொண்டு தனியொருவனாக எதிர் நீச்சல் போடும் முயற்சியில் இறங்கினார்

இந்தக் கால கட்டத்தில் விவேகானந்தர் அமெரிக்கா சென்று இந்திய வரலாறு பாரம்பரிய பெருமை பண்பாடு, சமயக் கோட்பாடுகள், தத்துவம், ஆத்மீக முன்னேற்றம் முதலியவற்றை மேல்நாட்டு அறிஞர்கள் உணர்ந்து கொள்ள வகைசெய்து அதன் பின்

அவர் நமக்குச் செய்த அதே பணிகளை நாம் நமது எதிர்காலச் சந்ததியினரின் மீட்சிக்காகவும், உயர்வுக்காகவும் செய்ய வேண்டும். இந்த அடிப்படையிலேயே சுவாமி விபுலாநந்தருக்காக நாம் மேற்கொள்ளும் நினைவுச் செயற்பாடுகள், நூற்றாண்டுப் பணிகள் முதலியன அமைய வேண்டும். எனவே அவை வெறுமனே நினைவுச் சொற்பொழிகளாக நூல் வெளியீடுகளாக நினைவுச் சின்னங்களாக மட்டும் நின்று விடக்கூடாது. அவர் ஆற்றிய பணிகளில் ஒன்றிரண்டையாவது நாம் செய்து முடிக்க வேண்டும். இதற்கான நமது முதல் தேவை தியாக உணர்வு

இதையிட்டு நாம் சிறிது சிந்திப்போம். சுவாமி விபுலாநந்தரின் பின் ஈழத்திலிருந்த ஸ்ரீ இராமகிருஷ்ண சங்கத் துறவியாகச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர்? விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சிலரே அவ்வாறு செய்துள்ளனர். ஸ்ரீ இராமகிருஷ்ண சங்கத் துறவிகள் ஆற்றும் பணிகளை நன்கு அறிந்த பின்னரும் இந்த எண்ணிக்கை அதிகரிக்காமல் போனது துரதிஷ்டமே

இவர் நிறுவிய கல்விச் சாலைகளைப் போலவே அநாதை இல்லங்களைப் போலவோ இந்த நூறு வருடத்தில் உருவாகிய நிறுனங்கள் எத்தனை? இவையும் ஒன்றிரண்டுக்கு மேற்பட்டதாக இல்லை. ஆனால் நமது சமுதாயத்தில் அண்மைக் காலமாக இடம் பெற்று வரும் கலவர சம்வங்களால் அநாதைகளாவோர் விதவைகளாவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே போகிறது சுவாமி விபுலாநந்தருடைய காலத்தைவிட இன்றைய கால கட்டத்தில் தான் மேற்படி இல்லங்களுக்கு அவசரமான தேவை ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக இதுவரை நாம் எதுவும் செய்யவில்லை நாளுக்கு நாள் பெருகிவரும் அனாதைகள் தகுந்த முறையில் அரவணைக்கபடாவிடின் எதிர் காலத்தில் அவர்கள் சமுதாய விரோதிகளாக மாறக்கூடிய சாத்தியக் கூறுகள் உண்டு.

ஏற்கனவே உள்ள இராமகிருஷ்ண மிஷன் அநாதை இல்லங்களிலும், வேறிடங்களில் உருவாகிய இரண்டொரு அநாதை, விதவை, வயோதிபர் இல்லங்களிலும் வாழ்ந்து வரும் நமது சகோதரர்களுக்கு நாம் உருப்படியாக ஏதாவது செய்துள்ளோமா? விபுலாநந்தரைப் பற்றிப் பேசும்போது இந்த இல்லக் குழந்தைகளைப் பற்றிய எண்ணம் நமக்கு ஏற்படுகிறதா?

எனவே மேற்படி சிந்தனைகளின் அடிப்படையில் சுவாமி விபுலாநந்தருக்கு நன்றிக்கடன் செலுத்த வேண்டுமானால் பினவரும் நடவடிக்கைகளில் உடனடியாக நாம் இறங்க வேண்டும்.

1. ஏற்கனவே இ. கி. மி. இல்லங்களிலும் பிற நிறுவனங்களிலும் உள்ள ஆதரவற்ற குழந்தைகள் மற்றும் வயோதிபர்கள், விதவைகள் ஆகியோருக்கு நமது வருமானத்தில் ஒரு சிறு பகுதியை மாதாந்தம் அளிப்போம் இதற்காக (Endowment) போன்ற நிதி வைப்புக்களை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்போம் இந்த ஏற்பாடு நிலையானது நமது அன்புக்குரியவர்களின் நினைவாகவும் இவற்றைச் செய்யலாம்.
2. மேற்படி கல்வி கற்கும் குழந்தைகளுக்கும், வேறு கல்வி நிறுவனங்களில் கல்வி கற்கும் வசதியற்ற ஏழைக் குழந்தைகளுக்கும் புலமைப் பரிசில் (Scholarship) போன்ற வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்போம்.
3. தற்போது அபிரிதமாகப் பெருகிவரும் அநாதைகளுக்கும் மற்றும் விதவைகளுக்கும், முதியவர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கப்போதிய நிறுவனங்கள் இல்லை. இ. கி. மி. இல்லங்களில் அனுமதி கிடைக்காமல் தத்தளிக்கும் குழந்தைகள் ஏராளம். அவர்களுக்கு புகலிடம் வழங்குவதற்காக நிறுவனங்களை உருவாக்குவோம்.

தாயகம் திரும்பி அறியாமை இருளிலும், வறுமைப் பிணியிலும் சிக்குண்டிருந்த மக்களை தட்டி எழும்புவதற்கு ஆத்மீக பலம் ஒன்றே துணையெனக் கொண்டு தனியொருவனாக அவர் செயற்பட்டார்.

சுவாமி விவேகானந்தரின் இந்தச் செயற்பாடுகள் விபுலாநந்தரை வெகுவாகக் கவர்ந்தன. அவருக்கு ஆதர்சமாக விளங்கின. அவரது அடிச்சுவட்டைப் பின்பற்றுவதன் மூலமே தானும் தனது மக்களை அவ்வாறான ஒரு இருண்ட வாழ்விலிருந்து மீட்க முடியுமென அவர் நம்பினார் அதற்கு அனுசரணையாக சுவாமி விவேகானந்தரைப் போலவே தானும் இராமகிருஷ்ண சங்க துறவியாக மாற வேண்டுமென முடிவு செய்தார். அதன்படி இளம் வயதிலே துறவைமேற்கொண்டு மூன்று வருடங்கள் துறவு வாழ்க்கையில் ஆத்மீக பயிற்சி பெற்று ஒரு ஆத்ம ஞானியாக வெளிவேறினார்.

உலோகாயக் கவர்ச்சிகளும், வாலிப உணர்களும் மேலோங்கி இருக்க வேண்டிய அந்த வாலிப வயதில் தனக்குத் கிடைக்கவிருந்த அத்தனை பெருமைகளையும் பதவிகளையும், புகழையும், செல்வத்தையும், உற்றார் உறவினருக்கான கடமைகளையும் அவர் உதறித் தள்ளிவிட்டு துறவு பூண்டார். தனது மக்களுக்காகவும் சமூகத்திற்காகவும் அவர் செய்த பெரும் தியாகம் இது. இன்று நாம் அனுபவிக்கும் சகல விதமான வாழ்க்கை வசதிகளுக்கும், சமுதாய மேம்பாட்டுக்கும் அத்திவாரமாக, அடிநாதமாக அமைந்தது இந்த மகத்தான தியாகம்.

இத்தகைய ஆத்மீக பலத்துடன் ஈழநாடு திரும்பிய சுவாமிகள் உடனடியாகச் செயலில் இறங்கினார். யாழ்ப்பாணம், திருக்கோணமலை, மட்டக்களப்பு ஆகிய முக்கியமான மூன்று தமிழ்ப் பிரதேசங்களிலும் பாடசாலைகள் நிறுவும் முயற்சிகளை மேற்கொண்டார். அக்காலத்தில் பணக்காரர்களுக்கு மட்டுமே கிடைத்துக் கொண்டிருந்த கல்வி வசதிகளை ஏழைகளும் பெறுவதற்கு வழி வகுத்தார். ஏழை மாணவர்கள் தங்கியிருந்து பள்ளிப்படிப்பை மேற்கொள்ளுவதற்காக அநாதை இல்லங்களை நிறுவினார். நாடு முழுவதும் சூறாவழி வேகத்தில் சுவாமிகள் பயணம் செய்து இம்முயற்சிக்கான நிதியைத் திரட்டுவதிலும், இம்முயற்சியின் எதிர்கால நன்மைகளை மக்களுக்கு உணர்த்துவதிலும் இம்முயற்சிகளுக்கு மக்களின் ஆதரவை தேடுவதிலும் இரவு பகலாக உழைத்தார்

இந்த மகத்தான சாதனைகளை அவர் ஆற்ற வேண்டிய சூழ்நிலை பற்றி நாங்கள் அறிய வேண்டியது அவசியம். அக்காலத்தில் அந்நியர் ஆட்சியும், அவர்களது அனுசரணை பெற்ற மதத்தின் செல்வாக்கும் மேலோங்கி இருந்தன. எனவே இந்துக்களின் மேம்பாட்டுக்கும், ஏழைகளின் உயர்ச்சிக்கும் ஆதரவு இருக்கவில்லை ஏழைக்கு இரங்கும் சிந்தனைகளும், சூழ்நிலைகளும் இப்போது, சமுதாயத்தில் செறிந்திருக்கவில்லை ஏழைகள் என்றாலே ஒரு இளக்காரம், இந்துக்கள் என்றாலே ஒரு ஏளனம். காவி உடை தரித்த துறவி என்றால் ஒரு கேவலம், சிறு சிறு நன்மைகளுக்காக, மக்கள் மதம் மாறும் நிலை இத்தகைய அந்நியமான ஒரு பகைப்புலனில் விபுலாநந்தர் கருமமாற்ற வேண்டியிருந்தது.

இப்தப் பின்னணியில் காரியங்களைச் சாதிப்பதற்கு எத்தகைய சோதனைகளையும், வேதனைகளையும் சுவாமிகள் எதிர் நோக்க வேண்டி இருந்திருக்கும் என்பதை நாம் சுலபமாகவே ஊகித்துக் கொள்ளலாம். பாதை வெட்டிப் பயணம் செய்ய வேண்டிய நிலை அவருக்கு.

இவ்வாறு அவர் தன்னுடைய வாழ்க்கை முழுவதையும் சமூகத்திற்காக அர்ப்பணித்து அல்லும் பகலும் அயராது உழைத்த தன் காரணமாகவே இன்று நாம் சிரமமின்றி பல வாழ்க்கை வசதிகளை அனுபவிக்கின்றோம். எனவே நமது மீட்சிக்காகவும், உயர்வுக்காகவும் பாடுபட்ட ஒருவருக்கு நாம் செய்யும் நன்றிக்கடன் எவ்வாறு அமையவேண்டும்?

4. மேற்படி மணிகளை மேற்கொள்வதற்காக ஒரு வருடத்தில் ஒரிருவராவது இ. கி. மி' சங்க துறவு வாழ்க்கையில் சேர்ந்து மேற்படி இல்லச் சேவைகள் மேலும் சிறப்படைய உதவி செய்வோம். (ஏனைய கிறிஸ்தவ, பெலத்த மதங்களில் இவ்வாறு துறவு வாழ்க்கை மேற்கொள்ளும் நடைமுறை இருப்பதையும் நூற்றுக்கணக்கில் அந்தந்த சமயங்களில் துறவிகள் உருவாகி சமய சமூக சேவைகளை மேற்கொள்வதையும் நாம் கண்கூடாகப் பார்க்கிறோம்.

இவைகள் புதிய சிந்தனைகள் அல்ல. நமக்குத் தெரிந்த விடயங்கள். ஆனால் இவற்றைப் பார்த்த நாம் மறக்கிறோம். உறங்குவது போலப் பாசாங்கு செய்கிறோம் எனவே இந்த பாசாங்கு உறக்கத்தை உதறி எறிந்து விட்டு நிதர்சனத்துக்கு வருவோம் மேற்படி பணிகளை மேற்கொள்வதற்கு இனியாவது அர்த்த பூர்வமான ஆத்மார்த்தமான நடவடிக்கைகளை மேற்கொற்வோம்.

**'எழுமின் விழிமின் இலக்கை அடையும் வரை ஓயாது உழைமின்'**

இரா. நாகலிங்கம்,
ஆரையம்பதி - காத்தாங்குடி.



# இந்துக் கல்லூரியின் வரலாற்றில் சுவாமி விபுலாநந்தர்

சி. தண்டாயுதபாணி
(அதிபர், இ. கி. மி. இந்துக்கல்லூரி)

திருக்கோணமலை இராமகிருஷ்ண மிஷன் இந்துக்கல்லூரியின் வரலாற்றை 1925ம் ஆண்டை ஒரு பிரிநிலைக் கோடாக வைத்து நோக்குவது வசதியானதாக அமைகின்றது. ஏனெனில் 1925ம் ஆண்டில் தான் சுவாமி விபுலாநந்தர் இக்கல்லூரியைப் பொறுப்பேற்றார். ஆகவே சுவாமி விபுலாநந்தர் கல்லூரியைப் பொறுப்பேற்ற காலத்திற்கு முந்திய வரலாற்றை ஒரு பகுதியாகவும், பொறுப்பேற்றதன் பின்னுள்ள வரலாற்றை இன்னொரு பகுதியாகவும் நோக்குவோம்.

## 1925-க்கு முன்

திருக்கோணமலை இராமகிருஷ்ண மிஷன் இந்துக்கல்லூரியினுடைய ஆரம்பத்தை நாம் கடந்த நூற்றாண்டின் தொண்ணூறாம் ஆண்டுகளின் பிற்பகுதியில் காணமுடியும். ஏறத்தாழ 1897இல் இக் கல்லூரி ஆரம்பிக்கப் பட்டதாக சில சான்றுகள் பகருகின்றன. திருக்கோணமலை நகரில் வாழ்ந்த சில இந்துப் பெரியார்களினால் இக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. தியாக சிந்தையுடன் கடமை புரிந்த சில ஆசிரியர்கள் ஆரம்ப காலத்தில் இக்கல் லூரியில் இருந்தார்கள். இவர்களின் தன்னலமற்ற பணிகளின் காரணமாகவே இக்கல்லூரி தொடக்க காலத்தில் ஒரு ஆரம்பப் பாடசாலையாக உயிர்ப்புடன் இயங்கிக்கொண்டிருந்தது.

1922ம் ஆண்டில் இக்கல்லூரி ஒரு ஆரம்ப பாடசாலையாக உத்தியோக பூர்வமாக அரசாங்கத்தினால் பதிவு செய்யப்பட்டு, சமூகத்தில் மதிப்புடன் திகழ்ந்த இந்துப் பெரியார்களைக் கொண்ட ஒரு இயக்குநர் சபையினால் நிர்வகிக்கப்பட்டுக் கொண்டு வந்தது.

ஆரம்ப காலத்தில் இக்கல்லூரி இந்து ஆண்கள் தமிழ்ப்பாடசாலை (Hindu Boys Tamil School) இந்து ஆண்கள் ஆங்கிலப் பாடசாலை (Hindu Boys English School) என இரு பிரிவுகளாக ஒரே நிர்வாகத்தின் கீழ் இயங்கிக் கொண்டிருந்தது. சுவாமி விபுலாநந்தர் 1925இல் இப் பாடசாலையைப் பொறுப்பேற்பதற்கு முன்னதாகவே ஆங்கில மொழிக்கல்வி இப் பாடசாலையில் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்து தமிழ்ப்பாடசாலையின் தலைமையாசிரியராக யாழ்ப்பாணம் வல்வெட்டியைச் சேர்ந்த திரு. V. தம்பையா என்பவர் 1910ம் ஆண்டி லிருந்து 1922ம் ஆண்டு வரை நீண்ட காலமாகப் பணியாற்றியுள்ளார்.

திரு. ஆறுமுகம், திரு. பரமசாமி என்போரும் தமிழ்ப் பாடசாலையில் தலைமையாசிரியராகக் கடமையாற்றியுள்ளனர். இதே காலக் கட்டத்தில் இந்து ஆங்கிலப் பாடசாலையில் பின் வருவோர் தலைமையாசிரியர்களாகக் கடமை புரிந்துள்ளனர்.

1. A. மாசிலாமணி - (திருகோணமலை)
2 திரு. V. வேலாயுதம்பிள்ளை - (திருகோணமலை)
3. திரு. S. U. கனகசபாபதி - (மட்டக்களப்பு)
4. திரு. இராமக்கிருஷ்ண ஐயர் B.A - (இந்தியா)
5. திரு. K. கோவிந்தாச்சாரி .B.A - (இந்தியா)

1910 ம் ஆண்டளவில் இந்து தமிழ்ப்பாடசாலையில் ஐந்தாம் வகுப்பு வரையுமே இருந்துள்ளது. ஆங்கிலப் பாடசாலையிலும் ஐந்தாம் வகுப்பு வரையுமே இருந்துள்ளது. மாணவர்கள் தமிழ்ப் பாடசாலையில் ஐந்தாம் வகுப்பு வரையும் படித்து முடித்து விட்டு ஆங்கிலப் பாடசாலையில் சேர்ந்து படிப்பது வழக்கம். ஆங்கிலப் பாடசாலையில் முதலாவது வருடம், இரண்டாவது வருடம் அதற்கடுத்து ஐந்தாம் வகுப்பு என்ற முறைப்படியாக வகுப்புக்கள் அமைந்திருந்தன. பாடசாலைப் பரிசோதகர் (Inspector of Schools) வந்து மாணவர்களைப் பரீட்சிக்கும் வழக்கம் இருந்தது.

1921ம் ஆண்டில் ஆங்கிலப் பாடசாலையில் ஆறாம் வகுப்பு இல்லாதிருந்ததனால் இப்பாடசாலையில் ஐந்தாம் வகுப்பைச் சித்தியடைந்த மாணவர்கள் தொடர்ந்து ஆறாம் வகுப்பில் கற்பதற்காக வெஸ்லியன் மிஷன் பாடசாலைக்கும் (தற்போதைய மெதடிஸ்த பெண்கள் பாடசாலை) சென்றனர். ஆனால் 1921ம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் இந்து ஆங்கிலப் பாடசாலையிலும் ஆறாம் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டு விட்டதனால் இங்கிருந்து வெஸ்லியன் மிஷன் பாடசாலைக்குச் சென்ற பல மாணவர்கள் திரும்பவும் இங்கேயே வந்தனர்.

தலைமையாசிரியர் திரு. K. கோவிந்தாச்சாரி காலம், வரையில் இந்து ஆங்கிலப்பாடசாலையில் எட்டாம் வகுப்பு வரையுமே இருந்துள்ளது எட்டாம் வகுப்பு இறுதியில் நடைபெறுகின்ற அரசாங்க பரீட்சை E. S. L. C என (Elementary School Leaving Certificate) அழைக்கப்பட்டது. சுவாமி விபுலாநந்தர் இப்பாடசாலையை 1925 இல் பொறுப்பேற்கையில் திரு. கோவிந்தாச்சாரி அவர்களே தலைமையாசிரியராக இருந்தார் என்பதை. அறிய முடிகின்றது.

1922ம் ஆண்டில் வேல்ஸ் இளவரசர் (H. R. H. Prince of Wales) இலங்கைக்கு (கொழும்பு) விஜயம் செய்ததையொட்டிய கொண்டாட்டங்கள் நாடெங்கனும் நடாத்தப்பட்டன. அப்பொழுது திருகோணமலையில் நடைபெற்ற அணிநடை போன்ற கொண்டாட்டங்களில் பாடசாலை பங்குபற்றிய போதே பாடசாலைக் கொடியின் நிறம், தங்கநிறமும், பச்சைநிறமும்

(Gold & Green) எனத் தீர்மானிக்கப்பட்டது. தமிழ்ப்பாடசாலையும், ஆங்கிலப் பாடசாலையும் ஒரு நிர்வாகத்தின் கீழ் இயங்கி வந்ததால் ஒரே நிறக் கொடியையே கொண்டிருந்தார்கள்.

இந்து தமிழ்ப் பாடசாலை கால ஓட்டத்தில் கோணேஸ்வர வித்தியாலயமாக பெயர் மாற்றம் பெற்று இன்று நகரில் ஒரு சிறந்த வித்தியாலயமாக திகழ்ந்து கொண்டிருக்கின்றது. இந்து ஆங்கிலப் பாடசாலை இன்று இந்துக்கல்லூரியாக வளர்ந்து இம்மாவட்டத்தின் ஒரு முன்னணி உயர்தரக் கல்லூரியாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது. ஒரே கல்விப் பாரம்பரியங்களின் கீழ் வளர்ந்து வந்த இவ்விரு கல்வித்தாபனங்களும் இன்றும் தாங்கள் அன்று கொண்ட ஒரே நிறக் கொடியையே கொண்டிருக்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

விபுலானந்தர் பாடசாலையைப் பொறுப்பேற்பதற்கு முன்னதாக பாடசாலையின் முகாமையாளர் சபையில் காலத்திற்குக் காலம் பின்வருவோர் இடம் பெற்றிருந்ததை அறிய முடிகின்றது.

1. வழக்கறிஞர் C. வல்லிபுரம்பிள்ளை முதலியார்.
2. வழக்கறிஞர் S. தியாகராசா.
3. வழக்கறிஞர் விஸ்வலிங்கம்.
4. திரு. அருணாசலம்.
5. திரு. முருகுப்பிள்ளை. (நில அளவையாளர்)
6. திரு. சுப்பிரமணியம். (சிறாப்பர்)
7. திரு. வைத்திலிங்கம்.

ஒரு சந்தர்ப்பத்திலே இப்பாடசாலையில் மாணவர்களாலும் ஆசிரியர்களாலும் ''அல்லி அர்ச்சுனா'' என்ற நாடகம் அரங்கேற்றப்பட்ட போது இந்நாடகத்தில் நடித்த மாணவன் ஒருவன் தானே இயற்றிய நாடகத்திற்கு முன்னதாகப் பாடிய பாடலில் இம்முகாமையாளர்கள் சிலரைப் பற்றிய குறிப்புக்கள் வருவதைக் காண முடிகின்றது. அப்பாடல் பின்வருமாறு:

> ''திரிகோணமலை சேர் வளவை தினமும் எண்ணி
> வருபவராம் சுப்பிரமணியச் சிறாப்பர் வைத்திலிங்கம்
> பரிவொடு காத்திடு மனேஜர் வல்லிபுரம்பிள்ளை முதலி
> குரவோர் தம் மலர்ப்பதம் உகந்து கும்பிட்டேனே.

சுவாமி விபுலானந்தர் அவர்கள் 1925ம் ஆண்டில் இக்கல்லூரியைப் பொறுப்பேற்பதற்காக திருகோணமலைக்கு வருவதற்கு முன்பதாகவே ஒரு முறை இங்கு விஜயஞ் செய்துள்ளார். 1918ம் ஆண்டில் முதன் முதலாக அவர் திருகோணமலைக்கு இந்து இளைஞர் சங்கம் நடாத்திய இந்து மாநாட்டில் உரை நிகழ்த்துவதற்காக வந்துள்ளார். இந்த மாநாடு இந்துக்

கல்லூரியிலேயே நடைபெற்றது. ஆனால் அவர் இந்த மாநாட்டிற்கு சுவாமி விபுலானந்தராக வரவில்லை. பண்டிதர் மயில்வாகனனாகவே வந்தார். பண்டிதர் மயில்வாகனனார் சென்னை மைலாப்பூர் இராமகிருஷ்ண மடத்தில் துறவியாகி சுவாமி விபுலானந்தர் என்ற துறவுத் திருநாமமும் பூண்டு இலங்கைக்கு 1924ம் ஆண்டிலேயே வந்தார்.

### 1925-க்குப் பின்

1925 இக்கல்லூரியைப் பொறுத்தஅளவில் முக்கியமான ஒரு ஆண்டாகும். இந்த ஆண்டில்தான் சுவாமி விபுலானந்தர் இராமகிருஷ்ண மிஷன் சார்பில் இக்கல்லூரியைப் பொறுப்பேற்றார். 1924ம் ஆண்டில் சுவாமி விபுலானந்தர் இராமகிருஷ்ண மடத்துத் துறவியாக இலங்கைக்கு மீண்டதிலிருந்து கிழக்கு மாகாணத்தின் கல்வி வரலாற்றில் ஒரு புதிய சகாப்தம் ஆரம்பித்தது எனலாம். இந்துப் பாடசாலைகளின் கல்வி வளர்ச்சியில் சுவாமி அவர்கள் எடுத்துக்கொண்ட அதீதமான அக்கறை வரலாற்றில் உன்னதமான எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டியதாகும்.

சுவாமி அவர்களது ஆழ்ந்த அறிவின் திறத்தினாலும், கல்விப் பிரச்சனைகளின்பாலுள்ள அகன்ற அனுபவத்தினாலும், முற்போக்குடைய நேரிய சிந்தனையாலும் கிழக்கு மாகணத்திலுள்ள பல பாடசாலைகள் பயன்பெறத் தொடங்கின. கிழக்கு மாகாண மக்கள் நல்ல ஒரு கல்விச் சிந்தனையாளரையும், வழிகாட்டியையும் பெற்றுக்கொண்டனர். சுவாமி அவர்கள் இந்தியாவிலிருந்து மீண்டதன் பின் முதன் முதலில் அவர் தனது கல்விப் பணியை ஆரம்பித்தது திருக்கோணமலை இந்துக்கல்லூரியில் தான் என்றால் அது மிகையாகாது.

1925ம் ஆண்டில் திரு. வல்லிபுரம்பிள்ளை முதலியார் தலைமையில் இருந்த முகாமையாளர் சபை பாடசாலையை இராமகிருஷ்ண மிஷனுக்கு கையளிப்பதற்கு முடிவு செய்ததை அடுத்து சுவாமி விபுலானந்தர் அவர்கள் பாடசாலையின் நிர்வாகத்தைப் பொறுப்பேற்றார். சுவாமி அவர்கள் பாடசாலையைக் கையேற்ற திகதி 01-06-1925 ஆகும். விபுலானந்தரின் நேரடியான நிர்வாகத்தின் கீழ் இந்து ஆங்கிலப் பாடசாலையு, இந்து தமிழ்ப் பாடசாலையும் துரிதமான வளர்ச்சியைக் கண்டன. மாணவர்களது எண்ணிக்கையும் அதிகரித்துச் சென்றன. புதிய கட்டடங்களும் கட்டப்படலாயின.

சுவாமிகள் கையேற்றபோது தமிழ்ப் பாடசாலைக்கு ஒரு கட்டடமும், ஆங்கிலப் பாடசாலைக்கு ஒரு கட்டடமும் தான் இருந்தன. இக்கட்டடங்களில் போதிய இடவசதி மாணவர்களுக்கு இருக்கவில்லை. இக்கட்டடங்களுக்கு கிடுகினால் வேயப்பட்ட கூரையே இருந்ததனால் மழைகாலங்களில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பல அசௌகரியங்கள் ஏற்பட்டன. இதனால் பக்கத்திலுள்ள காணியை வேண்டி பாடசாலைக் கட்டடம் ஒன்றை அமைப்

பதற்காக சுவாமி அவர்களும் ஆசிரியர்களும் பொதுமக்களிடம் சென்று நிதி சேகரித்தார்கள். இதில் பெருமளவு நிதியினை அளித்தவர் தம்பலகமத்திலுள்ள திரு. காளியப்பு அவர்களாவார். இவ்வாறு சேரிக்கப்பட்ட நிதியைக் கொண்டு அமைக்கப்பட்ட அலங்காரமான முகப்பு வேலைகளைக் கொண்ட புதிய மண்டபம் 1927ம் ஆண்டில் அப்போது கவர்னராக இருந்த H. E. சேர். ஹேர்பட் ஸ்டான்லி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இத்திறப்பு விழாவில் சுவாமி யத்தீஸ்வரானந்தா அவர்களும் சுவாமி ஆனந்தானந்தரி அவர்களும் சமயக் கிரியைகளை நடாத்தி வைத்தார்கள். இம் மண்டபம் பின்னர் காளியப்பு மண்டபம் எனப் பெயர் சூட்டி அழைக்கப்பட்டது.

காளியப்பு மண்டபத்தில் ஆரம்பத்தில் ஆங்கிலப் பாடசாலை இயங்கியது. இப்போதைய சம்பந்தர் மண்டபம் இருக்கும் இடத்தில் அமைந்திருந்த பழைய கட்டடத்தில் தமிழ்ப்பாடசாலை இயங்கியது. 1933ம் ஆண்டில் சம்பந்தர் மண்டபம் கட்டப்பட்ட பின்னர் ஆங்கிலப் பாடசாலை சம்பந்தர் மண்டபத்துக்கு மாற்றப் பட்டு தமிழ்ப்பாடசாலை காளியப்பு மண்டபத்தில் இயங்கியது.

இந்து ஆங்கிலப் பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றி காலமாகிய திரு. P. K. சம்பந்தரது நினைவாக அவரது மனைவியினாலும் உறவினர்களாலும் சம்பந்தர் மண்டபம் கட்டப்பட்டு அவ்வேளையில் கிழக்கு மகாணத்திற்கு அரசாங்க அதிபராக இருந்த திரு. V. குமாரசாமி அவர்களால் 1933ம் ஆண்டில் திறந்து வைக்கப்பட்டது. சுவாமி விபுலாநந்தர் அவர்களது வேண்டுகோளின்படி திரு. V. குமாரசுவாமி அவர்கள் மட்டக்களப்பிலிருந்து வருகை தந்து இம்மண்டபத்தைத் திறந்து வைத்தார். அவ்வேளையில் திருகோணமலை உதவி அரசாங்க அதிபராக இருந்தவர் திரு. M. K. T. சண்டிஸ் (M. K. T. Sandys) என்னும் ஆங்கிலேயர் ஆவர். இவரும் இத்திறப்பு விழாவிற்கு சமூகமளித்திருந்தார். சுவாமி அவர்கள் மேடையில் வைத்து திரு. குமாரசாமியைப் புகழ்ந்து கூறியபோது திரு. குமாரசாமி அவர்கள் கண்ணீர் சொரிந்தபடி இருந்தார் என்று அறிகின்றோம்.

சுவாமி அவர்கள் மேல் வகுப்புகளில் விஞ்ஞானம், கணிதம் போன்ற பாடங்களைக் கற்பிப்பது வழக்கம். E. S. L. C வகுப்புகளில் (8ம் வகுப்பு) பாடம் எடுத்துக் கொண்டிருக்கும் வேளைகளில் ஆறாம் வகுப்பு, ஏழாம் வகுப்பு மாணவர்களையும் அழைத்து எல்லோரையும் சேர்த்து கற்பிப்பதையும் சில வேளைகளில் வழக்கமாகக் கொண்டிருந்தார். சுவாமி அவர்கள் விஞ்ஞான பாடத்தைக் கற்பிப்பதில் ஒரு சிறந்த ஆசிரியராகவும், விஞ்ஞானக் கல்வியை மேம்படுத்துவதால் ஆர்வமாகவும் இருந்தவர். அவர் தனது காலத்தில் இப்பாடசாலையில் விஞ்ஞான ஆய்வுகூட வசதிகளை ஏற்படுத்தினார். அக்காலத்தில் திருகோணமலையில் இயங்கிய வேறெந்தப் பாடசாலைகளிலும் விஞ்ஞான ஆய்வுகூட வசதிகள் இருக்கவில்லை. சுவாமி அவர்கள் தனது காலத்திலே இலண்டன் கேம்பிரிஜ் சீனியர் பரீட்சையை மாணவர்கள் எடுப்பதற்கான வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுத்தார்.

சுவாமிகள் இக்கல்லூரியில் கடமைபாற்றிய காலத்தில் இலங்கைப் பல்கலைக்கழகத்திலிருந்து மாணவர் குழுவொன்று இங்கு வந்து விவாத அரங்கு ஒன்றில் கலந்து கொண்டது. இவ்விவாத அரங்கில் சுவாமி அவர்கள் பல்கலைக்கழக மாணவர் அணிக்கு எதிராக விவாதம் புரிந்தார். இப் பல்கலைக்கழக மாணவர் குழுவில் முன்னாள் வவுனியா நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சி. சுந்தரலிங்கம் அவர்கள், சிவில் சேவையாளர் திரு. நவரெட்ணராஜா ஆகியோர் இடம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

சுவாமி அவர்களது கையில் எப்போதும் பாரதி பாடல்கள் புத்தகம் இருக்கும். கீழ் வகுப்பு பிள்ளைகளை ஒன்றாகச் சேர்த்து வைத்து அவர் பாரதி பாடல்களைப் பாடுவார். அவரைத் தொடர்ந்து பிள்ளைகள் பாடுவார்கள். 'தீராத விளையாட்டுப்பிள்ளை', 'ஓடி விளையாடு பாப்பா', 'அச்சமில்லை அச்சமில்லை', 'உலகத்து நாயகியே எங்கள் முத்துமாரி' போன்ற பாடல்கள் சுவாமி அவர்கள் பிள்ளைகளுடன் சேர்ந்து அடிக்கடி பாடுகின்ற பாடல்களாக இருந்தன.

சுவாமி அவர்கள் இக்கல்லூரியில் பணியாற்றியபோது பின்வருவோர் தலைமையாசிரியர்களாகக் கடமையாற்றியுள்ளனர்:

திரு. K. இராமசாமி ஐயர். M. A. L. T
திரு. நரசிம்மர்
திரு. நம்பியார்

இவர்கள் அனைவருமே இந்தியாவிலிருந்து சுவாமி அவர்களால் வரவழைக்கப்பட்டவர்களாவர். இவர்களில் திரு. K. இராமசாமி ஐயர் அவர்கள் பின்னர் இந்துக்கல்லூரியிலிருந்து விலகிச் சென்று கல்வித் திணைக்களத்தில் (கொழும்பு) பிரதம மொழி பெயர்ப்பாளராகக் கடமையாற்றியுமுள்ளார்.

சுவாமி அவர்கள் கல்லூரியை நேரடியாக நிர்வகித்த இறுதிக் காலப் பகுதியில் அவருக்குக் கீழேயே திரு P. இராமச்சந்திரா M. A. (Hons) அவர்கள் அதிபராகக் கடமையாற்றியிருக்கின்றார். இவரும் இந்தியாவிலிருந்து சுவாமி அவர்களால் வரவழைக்கப்பட்டவரே. சுவாமிகளின் காலத்தால் பின்வரும் ஆசிரியர்கள் ஆங்கிலப் பாடசாலையில் ஆசிரியர்களாகக் கடமையாற்றியுள்ளார்கள்.

| | |
|---|---|
| திரு. V. செல்லையா. | திரு. M. A. சண்முகம். |
| திரு. C. கதிர்வேற்பிள்ளை. | திரு. V. குழந்தைவேலு. |
| திரு. N. பாலசுப்பிரமணியம். | திரு. K. சிதம்பரப்பிள்ளை |
| திரு M. கனகசுந்தரம். | திரு P. M. மேனன். P. A.(Hons) இந்தியா. |
| திரு S அம்பலவாணர். B.Sc. (Hons) | திரு. நாராயண ஐயர் B. A இந்தியா |

திரு. V. சோமசுந்தரம். B. Sc.
திரு. M. W. S. டிசில்வா.
திரு. V. நல்லையா.
பண்டிதர். E. பெரியதம்பிப்பிள்ளை.
பண்டிதர். A. சரவணமுத்து.
திரு. M. போல்.
திரு. M. A. நாயர். இந்தியா.
திரு. C. தங்கவேலு. B. Sc.
திரு. பீபஸ். B. A. (Lon)
பண்டிதர். செ. பூபாலபிள்ளை.
வித்துவான். சரவணமுத்து.
திரு. மா. பீதாம்பரம்.

இவர்களில் திரு. S. அம்பலவாணர் பின்னாட்களில் இக்கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றியவராவர். திரு. K. சிதம்பரப்பிள்ளை என்பவர் சுவாமி அவர்களின் மருமகனாவார். இவர்தான் பின்னாட்களில் சுவாமி நடராஜானந்தாவாக இராமகிருஷ்ண மிஷன் பாடசாலைகளின் பொது முகாமையாளராகக் கடமையாற்றியவர் ஆவார்.

சுவாமிகள் இந்துக்கல்லூரியில் பணியாற்றிக் கொண்டிருந்த போது தற்போதைய வித்தியாலயம் வீதியில் அமைந்துள்ள 'றோஸ் பீல்ட்' என அழைக்கப்படுகின்ற வீட்டைத்தான் தனது விடுதியாக வைத்திருந்தார். இவ்விடுதியில் திரு. P. இராமச்சந்திரா, திரு. மேனன் ஆகியோரும் சுவாமியுடன் உடனிருந்தார்கள். அத்துடன் சில அனாதைப் பிள்ளைகளையும் இந்த விடுதியில் வைத்து சுவாமிகள் பராமரித்தார். இவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். திரு. V. குப்புசாமி, திரு. T. கைலாயப்பிள்ளை (உப்புவெளி) என்போராவர். திரு. V. குப்புசாமி பின்னாளில் தனது பெயரை V. சதாசிவம் என மாற்றியிருந்தார் இவர் உதவிப் பரீட்சை ஆணையாளராக இருந்தவர் ஆவார். திரு. கைலாயபிள்ளை அவர்கள் சுவாமி அவர்களால் கல்கத்தா இராமகிருஷ்ண மடத்திற்கு அனுப்பப்பட்டு துறவியாகி மீண்டும் இலங்கை வந்தார்.

சுவாமி விபுலானந்தர் அவர்கள் 1925ம் ஆண்டில் இந்துக்கல்லூரியைப் பொறுப்பேற்றதிலிருந்து அதன் முகாமையாளராகக் கடமையாற்றி கல்லூரியின் வளர்ச்சிக்கு அளப்பரிய சேவைகளை ஆற்றியுள்ளார். சமகாலத்தில் மட்டக்களப்பில் சிவானந்த வித்தியாலயத்தை நிறுவுவதற்கும், கிழக்கு மாகாணத்தில் பல்வேறு பாடசாலைகளை நிறுவுவதற்கும் பரிபாலனங்களை பொறுப்பேற்பதற்கும் முயற்சிகளை மேற் கொண்டிருந்தார்.1926ம் ஆண்டில் யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா வித்தியாலயத்தைப் பரிபாலிக்கும் பொறுப்பினையும் ஏற்றுக் கொண்டார்.

1928ம் ஆண்டு ஜூன் மாதத்தில் சுவாமிகள் தான் பொறுப்பேற்ற பாடசாலைகளின் பொறுப்பை பிறரிடம் ஒப்படைத்து இந்துக் கல்லூரியின் வளர்ச்சியில் தனது செறிவான கவனத்தை செலுத்தும் பொருட்டு கல்லூரியின் அதிபர் பதவியினையும் ஏற்றுக் கொண்டார். 1930ம் ஆண்டு ஜூலை மாதம் வரையில் சுவாமிகள் அதிபராகக் கடமையாற்றிப் பின்னர் இராம கிருஷ்ண மிஷன் பாடசாலைகளைப் பரிபாலிக்கும் பொறுப்பை ஏற்று அதிபர் பதவியை திரு. P. இராமச்சந்திரா அவர்களிடம் கையளித்துச்

சென்றார். சகல இராம கிருஷ்ண மிஷன் பாடசாலைகளையும் பரிபாலிக்கின்ற முகாமையாளராக சுவாமி அவர்கள் பணியாற்றிய காலத்தில் அடிக்கடி இந்துக் கல்லூரிக்கு வருகை தந்துள்ளார். இந்துக் கல்லூரியின் வளர்ச்சிப் பணிகளில் ஆர்வத்தோடும், அக்கறையோடும் ஈடுபட்டுள்ளார்.

திரு. P. இராமச்சந்திரா அவர்களுக்குப்பின் பின்வரும் அதிபர்கள் இற்றைவரையில் இந்துக் கல்லூரியில் பணியாற்றி உள்ளார்கள்.

திரு. இரகுபதி
திரு. S. அம்பலவாணர்
திரு. K. சிவபாலன்
திரு. இளையதம்பி
திரு. நடராசா
திரு. அ. சிவலோகநாதன்
திரு. ச. குணரத்தினம்

1932 ம் ஆண்டில் இக்கல்லூரி சிரேட்ட இடைநிலைத் தரத்திற்கு உயர்த்தப்பட்டது. இராமகிருஷ்ண மிஷனின் அரவணைப்பில் உயர்ந்த இலட்சியங்களோடு வீறு நடைபோட்டு வந்த கல்லூரியின் வளர்ச்சி இரண்டாம் மகா யுத்தத்தின் போது 1940 ம் ஆண்டிலிருந்து 1945 ம் ஆண்டு வரை தடைப்பட நேர்ந்தது. யுத்த காலத்தின் போது பாடசாலைக் கட்டடங்கள் இராணுவத்தால் பொறுப்பேற்கப்பட்டன. இக்காலத்தில் ஆங்கிலப் பாடசாலை ஒரு சிறிய வாடகை வீட்டிலும் தமிழ்ப் பாடசாலை இன்னொரிடத்திலும் தற்காலிகமாக இயங்கிக் கொண்டிருந்தன. 1945 ம் ஆண்டில் மீண்டும் கல்லூரி தனது சொந்தக் கட்டடங்களில் இயங்கத் தொடங்கியது. தொடர்ந்து பழைய மாணவர்களதும், அபிமானிகளினதும் உதவிகள் கல்லூரிக்குக் கிடைக்கத் தொடங்கின. இவ்வுதவிகளினால இராணுவப்பாவிப்பின் காரணமாக சேதமுற்ற கட்டிடங்கள் திருத்தம் பெற்றன.

1942 ம் ஆண்டில் பழைய மாணவர் சங்கம் இரண்டு பெரிய வகுப்பறைகளை அமைத்துக் கொடுத்தது. 1947 ம் ஆண்டில் திரு. L. H. ஹரதாச அவர்கள் தனது காலஞ்சென்ற தந்தையார் நொரிஸ் டி சில்வா அவர்களின் நினைவாக ஒரு நூலகக் கட்டிடத்தை அமைத்துக் கொடுத்தார். இந்நூலகக் கட்டடம் 1947 ம் ஆண்டில் அப்போதைய கல்வி அமைச்சர் திரு. நுகவெல அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அதிகரித்து வந்த மாணவர்களது இருப்பிடத் தேவைக்காக பக்கத்திலிருந்து காணி சுவீகரிக்கப்பட்டு அதிலே நான்கு வகுப்பறைகள் கொண்ட ஒரு கட்டடம் அமைக்கப்பட்டது.

விஞ்ஞான ஆய்வு கூடங்கள் சீராக்கப்பட்டு புதிய கருவிகளும், உபகரணங்களும் அமைக்கப்பட்டன. 1952 ம் ஆண்டில் கல்லூரி முதலாம் தரத்திற்கு உயர்த்தப்பட்டது. தற்போதைய அதிபர் அலுவலகக் கட்டிடம்

1955ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 1958ம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டது. அதிபர்களது முயற்சிகளாலும் ஆசிரியர்களது தன்னலமற்ற தியாக மனப்பான்மையினாலும் கல்லூரி படிப்படியாக திருகோணமலை மாவட்டத்தின் ஒரு முன்னணிப் பாடசாலையாக வளர்ச்சியடைந்து வந்தது.

திரு. அ. சிவலோகநாதன் அவர்கள் 1979ம் ஆண்டிலிருந்து 1989ம் ஆண்டு வரை ஏறத்தாழ பத்து ஆண்டுகள் அதிபராக இருந்த காலத்தில் இக் கல்லூரி பெரு வளர்ச்சியைக் கண்டது என்று கூறினால் அது மிகையாகாது. இவரது காலத்தில் பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பாகவும், கட்டிடம் மற்றும் பௌதிக வசதிகள் தொடர்பாகவும் பல முன்னேற்றங்களைக் கல்லூரி கண்டது. அனுபவமும், திறமையும் கொண்ட நல்லாசிரியர்களை இக்கல்லூரி பெற்றுக் கொண்டதனால் உயர்தரக் கல்வியைப் பொறுத்த வரையில் இம் மாவட்டத்திலேயே ஒரு முதன்மையான இடத்தை இக்கல்லூரி வகிக்கின்றது.

1970ம் ஆண்டுக் காலப்பகுதியில் பல்கலைக்கழக அனுமதி முறையில் அரசினால் கடைப்பிடிக்கப்பட்ட மாவட்ட அடிப்படை அனுமதிப் பங்கீட்டு முறையினால் திருகோணமலை போன்ற பின்தங்கிய பகுதி மாணவர்கள் உற்சாகம் பெற்றனர். இந்த உற்சாகத்தை இக்கல்லூரி தகுந்த வகையில் பயன்படுத்திக் கொண்டது இந்த உற்சாகம் காரணமாக இம்மாவட்ட உயர்கல்வியை நோக்கி உந்தப்பட்டார்கள். இன்று இந்த மாவட்டத்தி லிருந்து அதிகமான மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு அனுப்புகின்ற முதன்மையான பாடசாலை இந்துக்கல்லூரியேதான் என்றால் அது மிகை யானதல்ல.

1989ம் ஆண்டின் க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் இக்கல்லூரி யின் மாணவன் செல்வன். K. இரவிச்சந்திரன் என்பவர் நான்கு 'A' தரச்சித்திகளைப் பெற்று கிழக்கு மாகாணத்திலேயே ஒரு வரலாற்றுச் சாதனையைப் படைத்தான். இதற்கு முன்பதாகவோ, பின்பதாகவோ எவரும் நான்கு 'A' தரச்சித்திகளை கிழக்கு மாகாணத்தில் இதுவரையில் பெற்றதில்லை.

கல்வியைப் போலவே விளையாட்டு, கலாச்சார முயற்சிகள் போன்ற வற்றிலும் இக்கல்லூரி மாணவர்கள் மாவட்ட ரீதியாகவும், தேசிய ரீதியாக வும் பரிசுகள் பலவற்றைப் பெற்று சிறந்து விளங்குகின்றார்கள். இக்கல்லூரி யின் மாணவர்கள் உயர்ந்த சீலமும் நன்னெறியும் கொண்டவர்களாக பாரம் பரியமான இராமகிருஷ்ண மிஷன் பண்பாட்டின அடிப்படையில் வளர்க்கப் படுகின்றார்கள்.

இக்கல்லூரியில் மிக நீண்ட காலமாகவே ஆரம்ப பிரிவு வகுப்புக்கள் இருக்கவில்லை. இந்நீண்ட காலக்குறை 1992 ம் ஆண்டில் நிவர்த்தி செய்யப் பட்டுள்ளது. இவ்வாண்டில் ஆரம்பப்பிரிவு வகுப்புக்கள் தொடங்கப்பட்

டுள்ளன. எதிர்காலத்தில் மாணவர் தொகை அதிகரித்துச் செல்லக் கூடிய வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

இன்னுமொரு நீண்ட காலக் குறைபாடான மாணவர்கள் விடுதி இல்லாமையைத் தீர்ப்பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. புதிய கூட்ட மண்டபம் ஒன்றை நிர்மாணிப்பதற்கான நிதி ஒதுக்கீடுகளும் அரசாங்கத்திடமிருந்து கிடைத்துள்ளன. கல்லூரியின் வளர்ச்சி குறித்து பாடசாலை அபிவிருத்திச் சங்கமும், பழைய மாணவர் சங்கமும் கல்லூரி நிர்வாகத்துடன் இணைந்து செயற்படுவது வரவேற்கக் கூடிய விடயமாகும்.

சுவாமி விபுலாநந்தரை அதிபராகவும், முகாமையாளராகவும் கொண்டிருந்த பேறுபெற்ற இக்கல்லூரியில் படிப்பதற்கும் பணியாற்றுவதற்கும் எமக்குக் கிடைத்த வாய்ப்புப் பற்றி நாம் பெருமை கொள்ளாமல் இருக்க முடியாது. எமது பேராசானை எந்நாளும் நினைவு கொள்ளத் தக்கவகையில் அன்னாரது திருவுருவச்சிலை எமது கல்லூரியில் நிறுவப்படுவது திருகோணமலைக்கே பெருமை தரும் விடயமாகும.

சுவாமி விபுலாநந்தரது அடிச்சுவட்டில் உன்னதமான சமுதாயத்தை உருவாக்கும் பணியில் திருகோணமலை இராமகிருஷ்ண மிஷன் இந்துக் கல்லூரி தொடர்ந்து நடைபோடும்.





# சிலை வடித்த எங்கள் சிற்பி

## மு. பத்மநாப சர்மா

விபுலானந்த அடிகள் அதிபராக இருந்த இந்துக்கல்லூரி முன்றலில் அடிகளாருக்கு சிலை நிறுவி அவர் நூற்றாண்டை கொண்டாட எடுத்த முயற்சி நல்ல பலனைப் பெற்றுள்ளது என்பதனை திருவுருவச்சிலை திறப்பு விழாவுக்கு வருகை தந்த நீங்கள் அனைவரும் உணர்ந்திருப்பீர்கள்.

சுவாமி சிலையை தத்ரூபமாக வடித்துத் தந்துள்ள எங்கள் சிற்பியைப் பற்றி இரண்டு வார்த்தை சொல்ல வேண்டியது எமது கடைப்பாடாகும்.

ஆசிரியராகத் தொண்டாற்றிய சிற்பி, பத்மநாப சர்மா தனது தெய்வீகக் கலைக்குக் குறுக்கே நிற்கும் ஆசிரியத் தொழிலையும் உதறியெறிந்து விட்டு, சிலைவடிக்கும் சிற்பியாகவே தன்னை பூரணமாக்கிக் கொண்டார். 18 வருடங்கள் ஆசிரியராகக் கடமையாற்றிய சர்மா இறுதியாகத் திருமலை புனித வளனார் கல்லூரியில் கடமையாற்றிக் கொண்டிருக்கும் போதே ஆசிரியத் தொழிலை விட்டு, சிற்பியாகவே தன் ஜீவனோபாயத்தை மாற்றிக் கொண்டார்.

சிற்ப சாஸ்திரத்தை பாடசாலைகளில் கற்பித்த சர்மா அவர்களின் ஆத்மார்த்தமான கலைவடிவங்கள் பல கும்பிறுபிட்டி, மாரியம்மன் கோவில், அலம்பில் முருகமூர்த்தி, சல்லிப் பிள்ளையார் பசறைக் கதிரேசன் ஆகிய ஆலயங்களில் இவரின் கலை நுணுக்கங்கள் நிறைந்த சிற்ப அழகு எழுந்து நிற்கும் அழகை இன்றும் காணலாம்.

ஓயாத உழைப்பினால் உருவான சுவாமிகளின் சிலையை இத்தனை அழகுற வடித்துத் தந்த எமது சிற்பியை நாம் என்றென்றும் நினைவு கொள்ளும் வண்ணம் சுவாமிகளின் திருவுருவச்சிலை எழுந்து நின்று கொண்டிருக்கிறது.

சுவாமிகளின் திருவுருவச்சிலையை நிறுத்தி வைத்த இத்தனை அழகு மிக்க பீடத்தை வடிவமைத்து உதவிய கட்டிட ஒப்பந்தக்காரர் எங்கள் விநாயகசோதி ஐயாவையும் இந்த இடத்தில் நினைவு கொள்வதில் அளப்பரிய சந்தோஷம் அடைகிறோம்.

நன்றி

# விபுலாநந்த அடிகளின் கல்விபற்றிய சில கருத்துக்கள்

செ. அழகரெத்தினம்
உதவிக் கல்விப் பணிப்பாளர்
பிராந்தியக் கல்வித் திணைக்களம்
திருக்கோணமலை.

கல்விபற்றிக் காலத்திற்குக் காலம் பல்வேறுபட்ட கருத்துக்கள் அதன் வரையறை, அமைப்பு, நோக்கம், இலக்கு, குறிக்கோள் தொடர்பாக வெளிக்கொணரப்படுவதும், விளக்கம் தரப்படுவதும், விமர்சிக்கப்படுவதும் இயல்பானதொன்றே. கல்விச் சிந்தனையாளர்கள், கல்வி மான்கள், கல்வி உளவியலாளர்கள், கல்விபற்றிய தம் சிந்தனையாளர்கள், கருத்துக்கள், தத்துவங்களைத் தத்தம் காலச் சூழலுக்கேற்ப தெரிவிக்கத் தவறியதில்லை. மனித சமூகத்தின் அடிப்படை அத்திவாரமாக அமைந்திருக்கும் கல்விபற்றிக் கரிசனை காட்டுபவர்களும், திட்டம் தீட்டுபவர்களும், அமுல்படுத்துவர்களும் கல்வித் துறையில் முக்கியத்துவம் பெறுவோராவர். இதற்கு மூலாதாரமான கருத்துக்களையும், தத்துவங்களையும் முன்வைக்கும் அறிஞர் பெருமக்கள் எல்லாராலும் ஏற்றப்படுதற்குரியோராவர். அவ்வகையில் விபுலானந்த நூற்றாண்டு நினைவுகூறும் இக்காலகட்டத்தில் விபுலானந்த அடிகளாரது கல்விக் கருத்துக்களும் ஆராயப்படுவதற்கான முக்கியத்துவம் பெறுகின்றன. விபுலானந்தர் மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் இலங்கையின் முதற்றமிழ்ப்பண்டிதர். ஒரு பி. எஸ். சி. பட்டதாரி இசைப்பிரியர். தமிழும், ஆங்கிலமும், வடமொழியும், நன்கு அறிந்தவர். வங்காளம், சிங்களம் போன்ற ஏனைய மொழிகளிலும் குறிப்பிடக்கூடியளவு தேர்ச்சி பெற்றவர். அவருக்கு ''முத்தமிழ் வித்தகர்'' என்ற பெயரே மேலோங்கி நிற்கின்ற போதும் அவர் ஒரு கல்வியாளர், கல்விப்பணிப்பாளர் என்பது இன்னும் எம்மத்தியில் எடுபடாமலே இருக்கின்றது. உண்மையில் சமகாலத்துக் கல்விச் சிந்தனையாளர் பலருடன் ஒப்பிட்டு ஆராயுமளவிற்கு கல்வித்துறையில் ஆற்றும் புலமையும், திறமையும் வாய்ந்தவராக விபுலானந்த அடிகள் விளங்கியுள்ளார். 55 வருட வாழ்க்கை வட்டத்துள் அடிகள் மட்டக்களப்பு மைக்கேல் கல்லூரி, முகனை பல்தொழிற் கல்லூரி, யாழ்ப்பாணம் புனித பற்றிக் கல்லூரி போன்றவற்றில் ஆசிரியராகவும், மானிப்பாய் இந்துக்கல்லூரி, திருகோணமலை இந்துக்கல்லூரி, மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயம் போன்றவற்றில் அதிபராகவும், இராமகிருஷ்ண மிஷன் பாடசாலைகளில் முகாமையாளராகவும், அண்ணாமலை பல்கலைக்கழகத்திலும், இலங்கைப் பல்கலைக்கழகத்திலும் தமிழ்த்துறைப் பேராசிரியராகவும், பல்வேறுபட்ட கல்வி நிறுவனங்களில் நெருங்கிய தொடர்பும், பிணைப்பும் கொண்டிருந்தவர் விவேகானந்தன், வேதாந்தகேசரி, இராமகிருஷ்ண விஜயம் போன்ற பத்திரிகைகளில் ஆசிரியராக கடமையாற்றியும், பல்வகை உயர்கல்வி நிறுவனங்களிலும், மாநாடுகளிலும் பேருரைகள் நிகழ்த்தியும், பல ஏடுகள் எழுதியும் கல்வி அனுபவம் நிரம்பப் பெற்றிருந்தவர்.

கல்விபற்றி விபுலானந்தர் ஒன்றாகத் தொகுத்தும் பகுத்தும் கூறாது. எழுதாதிருந்த போதும் ஆங்காங்கே அடிகள் கல்விபற்றி பிரயோசனமான தாக்கமுறு கருத்துக்களை, சிந்தனைகளை எழுதியும் பேசியும் வெளிப்படுத்தியுள்ளார் என்பதில் ஐயமில்லை. அவற்றை முழுதாகப் பெறமுடியாதிருப்பினும் கிடைக்கக்கூடியவற்றை ஒன்று தொகுத்து நோக்கின் விபுலானந்தரின் கல்வித்தத்துவங்கள், கருத்துக்கள் துலாம்பரம் பெறுவதைக் காணலாம். கீழைத்தேய மேலைத்தேய கல்வியியலாளர்களின் கருத்துக்களின் சங்கமத்தை, அதிலும் வேறுபட்டதும், வீறு கொண்டதுமான கல்விக் கருத்துன்மைகளையும் கண்டு தெளிவு கொள்ளலாம். அடிகளின் கல்விக் கருத்துக்கள் பல்வேறு கோணங்களில் விரிவாக ஆராயப்படவேண்டியன. இங்கு அவற்றை சுருக்கமுற எடுத்துக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாக அமையும்.

''கல்வி அழிவற்றது, உயர்வானது, சிறப்புடையது, அக்கல்வி'' உலக மக்கள் மெய்ப்பொருள் உண்மையை உணர்ந்து உய்வதற்கானவழி எனக் கூறும் விபுலாநந்தர், ''நிலையில்லாத பொருட்களிடையே வாழ்கின்ற நமக்கு என்றும் அழிவுபடாத ஆழ்ந்த உண்மைகளை எடுத்துரைக்கும் கல்வி சிறப்புடைய பொருள் என்பதற்கு ஐயமில்லை. எனவும் கல்வியின் அருமை பெருமைகளையும் சிறப்பு நோக்கையும் எடுத்துரைக்கின்றார். ''கிறிஸ்தவ சகாப்தத்திற்கு முன் நம் நாடு அடைந்திருந்த உன்னதநிலையை அடைதற்கான விடுதலை பெறக்கூடியதாகக் கல்வி அமைய வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாகக் கல்வியானது மனிதனை உருவாக்க வேண்டும்,, என வலியுறுத்துவதன் வாயிலாக மனிதப் பண்பைக் கல்வி ஊண்டி வளர்த்து நற்பிரஜைகளை தோற்றுவிக்க வேண்டும் என்பதை விபுலாநந்தர் வெளிக்காட்டியுள்ளார்

அந்நியராட்சி ஆதிக்கத்தில் நமது தேசிய கல்வி கலாசார பாரம்பரியங்கள் திசை திருப்பப்படுவதும், அழிவின் விளிம்பிற்கு தள்ளப்பட்டிருப்பதும் விபுலாநந்த அடிகளின் தேசியவாத உணர்விற்கு உரம் ஊட்டி இருந்தன நாவலருக்குப் பின்னர் சைவப்பள்ளிக் கூடங்களில் சமயம்,தமிழ் மொழி, தமிழ்கலாசாரம் என்பவற்றின் வளர்ச்சி மந்த நிலையில் இருப்பதையும், வடபகுதி தவிர குறிப்பாக கிழக்கிலங்கை, மலை நாட்டுப்பகுதிகளில் தமிழும் சைவமும் அவற்றுடன் இணைந்த கல்வியும் புறக்கணிக்கப்படுவதையும், அவற்றின் வளர்ச்சிக்கான சூழ்நிலையை உருவாக்கும் பள்ளிக்கூடங்கள் அமைக்கப்படவில்லை என்பதையும் அடிகள் நன்குணர்ந்திருந்தார். இதனால் இப்பகுதிகளில் இராம கிருஷ்ண சங்கமூலம் போதிய பள்ளிக்கூடங்கள் அமைக்கப்பட வேண்டுமென்று அடிகள் செயற்பட்டுள்ளார். பாரதியார் வழியில் சமுதாயப் புரட்சிகாணவும் சைவச்சூழலில் ஆங்கிலப் பாடசாலைகள் அமைக்கவும் விபுலாநந்தர் விளைந்து நின்றமை அவரது தேசிய கல்வி நோக்கை தெளிவுபடுத்துகின்றன.

1928 ம் ஆண்டு சித்திரைத்திங்கள் யாழ்ப்பாண இளைஞர் தேசிய காங்கிரசின் 4 வது மகாநாட்டின் போது தேசியத் தன்மையிலான கல்வியின் அவசியம் பற்றி விபுலாநந்தர் விளக்கியுள்ளமை குறித்து 20-04-28 சிலோன்

டெயிலி நியூஸ் (Ceylon Daily News), 27-04-28 மோனிங் ஸ்ரார்(Morning Star) பத்திரிகைகள் வெகுவாக புகழ்ந்து பாராட்டி வரவேற்று எழுதியமை ஈண்டு குறிப்பிடத்தக்கது. 1937 ம் ஆண்டில் வித்தியா பகுதியினரின் புதிய பிரமாணம் பற்றியும் 1938 ல் புதிய கல்வித் திட்டம் பற்றியும் விபுலாநந்தர் பல ஆதாரங்களை எடுத்து விமர்சிப்பதன் மூலம் நம்நாட்டின் தேசிய கல்வி முறையின் அவசியத்தையும் தேசிய நன்மை ஏற்படுத்தும் போக்கில் அது அமைக்கப்படுதல் வேண்டுமெனவும் திட்டவட்டமாகத் தெளிவு படுத்தியுள்ளார். ஈழகேசரிப் பத்திரிகையில் விபுலாநந்தர், கூற்றாக வெளிவந்த வித்தியா பகுதியினரின் புதிய பிரமாணம் 28-05-37 புதிய கல்வித்திட்டத்திற்கு ஆதரவு 30-10-38 வாலிபர் திறமை 28-06-33 இலங்கையிற் பிற்போக்கு 09-12-45 போன்ற செய்தித் தலைப்புகள் இவற்றைத் தெளிவாக விளக்கும்.

எனவே கல்வி தேசியத்தை வளர்ப்பதாகவும் உயர்த்துவதாகவும் அமைவது மட்டுமன்றி அது உலகலாவிய சர்வதேச ரீதியிலான ஒருமைப் பாட்டை உண்டாக்குவதாகவும் அமைய வேண்டுமென்ற பரந்த தேசியக் கருத்தையும் அடிகள் கொண்டிருந்தார் என்பதையும் மறுக்கவியலாது. தாய் நாட்டு, அயல்நாட்டு வரலாறு கலை கலாசார அம்சங்களை அறிவதோடு பல்வேறு வெளி நாடுகளின் வரலாறுகளை அறிவதும், பல்வகைப்பட்ட சமயங்களின் உண்மைகளை உணர்ந்து கொள்வதும் மாணவர்களுக்கு அவசியம் என அடிகள் அடிக்கடி வலியுறுத்தி வந்துள்ளார். கல்வி கற்பிற்கும் பொறுப்பை அரசு ஏற்றுக் கொண்டாலேயே தேசிய கல்வி முறையை ஏற்படுத்தலாம் என்றும்...... ஐயோ புத்தகப்படிப்பு உயிர் கொடுக்குமா? தேசியக் கல்வி வேண்டுமய்யா தேசியக்கல்வி வேண்டும் அன்றுதான் எங்கள் நாடு உய்யும் ...மகாத்மா வகுத்திருக்கும். வார்தாக்கல்வி முறைபோன்ற தேசியக் கல்விபான அன்றுதான் நிறைவேறும் என்றும் விபுலாநந்த அடிகள் தேசியக்கல்வியின் தேவையை மேலும் வலியுறுத்தும் விபுலாநந்தர், எல்லாநாடுகளும் எனது நாடுகள், எல்லா மனிதர்களும் எனதுஉறவினர் என்றே, உண்மைக் கல்வி கற்றவன் கருதுவான் அரசரின் ஆட்சி ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் அடங்கி அமையும். ஆனால் கற்ற மனிதனின் ஆட்சி, அதன் சிறப்பு எத்தேசிய எல்லைகளாலும் கட்டுப் படுத்தப்படாத தொன்றாகும். உலகம் உய்யவும் இன்று மனிதர்கள் உறும் அல்லல்களிலிருந்து மீட்சி பெறவும் பெருங்கல்வி நிலையங்கள் அனைத்தையும் சர்வரீதியாக ஒருங்கிணைத்தல் வேண்டும் என விபுலாநந்தர் கூறுவதன் மூலம் ''யாதும் ஊரே யாவரும் கேளீர்,, என்ற உலகப் பொது நெறி காட்டும் தன்மையை வேண்டுவதை அறியலாம். எனவே அடிகளாரின் தேசியவாதத்துடன் கூடிய மக்கள் கல்வித்தத்துவம் சுவாமி விவேகானந்தர், அண்ணல் காந்தியடிகள் ஆகியோரது கல்வித் தத்துவங் களோடு ஒன்றுபட்டு இருப்பதையும் உணரலாம்.

இறந்த காலத்தும் எதிர்காலத்தும் நிகழ்காலத்தும் எய்திய உண்மை களை ஆராய்ந்து உணரும் ஆற்றல் கல்விக்குண்டு எனக்கூறும் விபுலானந்தர்

ஒருவன் தான்பெற்ற தெய்வீகத்தன்மை நிலையில், நிலையில்லாதவை, மத்தியில் நின்று கொண்டு, நிலையானவற்றைத் தெரிந்து கொள்வதுதான் கல்வியின் நோக்கமாகும் என கல்வியின் உயர் நோக்கத்தை தெளிவுபடுத்தியுள்ளார். அத்தோடு "ஒருவன் கற்கின்ற கல்வியானது உள்ளத்திற்கு இனிமை பயத்தல் வேண்டும், உயிர்க்குறுதி பயக்க வேண்டும், உலக வாழ்விற்கு உறுபயன் அளித்தல் வேண்டும். இவற்றைக்கல்வி அளிப்பதன் மூலம், பொதுவில் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருளையும் தருவதாக அமைய வேண்டும் என்று கல்வியின் இலட்சியத் தன்மையினையும் கூறி வைக்கத் தவறவில்லை. இன்னும் "......கல்வியோ, கரையற்றது. கற்பவரோ சில்வாழ் நாட் பல பிணிச் சிற்றின்ப மாந்தர். ஆதலின் கற்கப்படு நூல்கள் இவையெனவும், அவற்றை கற்குமாறு இதுவெனவும் வல்லார் வாய்க்கேட்டுணர்ந்து கற்றற்குரிய காலத்தில் கற்கப்படுவனவற்றைக் கற்று நெறிநின்று நலனெய்தும் மாந்தரே வாழ்க்கையின் பயனை அடைந்தோராவார்." என்று விளக்கம் கொடுத்து ஆற்றல் சான்ற கவிவாணர்களைப் போற்றி அவர் மொழிகளைக் கடைப்பிடித்து வாழ்க்கையின் மர்மத்தை அறிந்து கொள்வதற்கு உபயோகமான கல்வியே கல்வியெனப்படுவது என்றும் கல்விக்கு இலக்கணம் வகுத்துள்ளார்.

உண்மை, நன்மை, செம்மை ஆகிய உயரிய பண்புகளை உண்டாக்கி, உள்ளத்தை வளப்படுத்தக் கூடிய கல்வி முறையே உகந்ததெனபது அடிகளாரது அபிப்பிராயமாகும். கல்வியானது உள்ளத்தை உயர்வழியில் சீர்ப்படுத்தி இறுதியில் உண்மைப் பொருளை உணர்ந்து வாழ்வின் உறுபயனை அடையக் கூடியதாக அமைய வேண்டும் என்பது அவரது அடிப்படைத் தத்துவமாகும். கல்வியானது மனதைச் சீர்படுத்திச் செம்மையும், நன்மையும், உண்மையும் உடையதாக்க வேண்டும். என வலியுறுத்தியுள்ளமை சிறப்பிற்குரியது இக் கருத்துக்கள் பிளேற்றோ, தாகூர் ஆகியோர் கருத்துக்களுடன் ஒன்றுபட்டு நிற்பதையும் உணரலாம்.

விபுலானந்த அடிகளின் கல்வித் தத்துவம் பற்றி மேலும் விளங்கிக் கொள்வதற்கு அவர் பல்வகைக் கல்விபற்றியும், கல்விப்பாடப் பொருள் பற்றியும் கல்விச் செயன்முறை பற்றியும் கருத்துக்களையும், அபிப்பிராயங்களையும் அறிந்து கொள்வதும் பொருத்தமாகும். இதனை இலகுவில் அறிந்து கொள்ள சமயக்கல்வி அழகியற்கல்வி, உடற்கல்வி, தொழிற்கல்வி, விஞ்ஞானக் கல்வி, பெண்கல்வி, தாய்மொழிக்கல்வி, பல்கலைக்கழகக்கல்வி என வகைப் படுத்தி விளக்கமாக ஆராய்வது சிறப்புடையதாகும். கட்டுரை விரிவஞ்சி இவை விரிவாக இங்கு ஆராயப்படவில்லை.

அடிகள் பல சமயங்களின் உண்மைத் தத்துவங்களையும் உணர்ந்து அவற்றை நன்கு விளங்கி எல்லாச் சமயத்தினரும் இணக்கமுற்று இசைவுடன் இனிது வாழவேண்டுமென விரும்பியவர். விருப்பதைத் தருகின்ற ஒழுக்கத்தை விருத்திசெய்யும் கல்வியே கல்வி, எனைய கல்வி கல்வியெனப்படமாட்டாது என்றும் நமது மைந்தருக்குரிய கல்வி இம்மை மறுமை இரண்டிற்கும் உறுதி

பயக்கின்ற நீர்மையதாக இருக்கவேண்டும்: என்றும் விதந்துரைத்துள்ளார்

அழகியல் கல்விக்கு ஓர் உரிய இடம் ஒதுக்கியுள்ளவர் விபுலாநந்தர் யாழ்நூல், மதங்க சூளாமணி நூல்கள் அழகியற்கலைக்கேற்ப அடிகளின் பற்றை வெளிப்படுத்தும். ''ஒரு நாட்டின் மக்களின் மனோநிலையும், கலையுணர்ச்சியும், நாகரிகமும், சங்கீதம், சித்திரம், சிற்பம் இவைகளால் தெளிவாகும்.'' எனவும் இசைத்தமிழ், நாடகத்தமிழ் இயல்பை பிறநாட்டார் அறியச்செய்யும் கடமை சர்வகலாசாலைக்குரியதென்றும் அடிகள் அழகியற் கல்விபற்றி வலியுறுத்தியுள்ளார்.

''பயனுள்ள கல்வி இருதுறைப்படுமெனவும் அவைதாம் உடற்பயிற்சியும் உளப்பயிற்சியாமெனவும் அறிகின்றோம். அவை ஒன்றோடொன்று தொடர்புடையன. உள்ளத்துறுதி உடலுறுதிக்கண்ணது என்று உடற்கல்வியின் அவசியத்தையும் அடிகள் தெளிவுபடுத்தினார்.

ஏட்டுக்கல்வியால் நாட்டுக்கு நிறையப்பயனேற்படாது என வலியுறுத்தும் அடிகள், நாட்டின் பலத்திற்கும் விருத்திக்கும் உகந்ததாகத் தொழிற்கல்வி கலைத்திட்டத்தில் முன்னுரிமை பெறவேண்டுமென்றும் கூறியுள்ளார். ''விஞ்ஞானத்துறையிலே அனைவருக்கும் இன்றியமையாத பாகம் உயிர் நூலாதலின் அதனை இளைஞருக்கும் அறிவுறுத்துதலே பயனுள்ள கல்வியின் பாற்படும்.'' என விஞ்ஞானக் கல்வியின் முக்கியத்துவத்தையும் விளக்கியுள்ளார்.

பெண்களுக்கு கல்வியறிவு அவசியம் முறையான கல்வி பயிற்றப்படும் போது மாணவ மாணவிகள் நாட்டுக்கும் சேவை செய்யும் நிலையை அடைகின்றார்கள். அன்று பெண்கல்வி முக்கியத்துவமும் விபுலானந்தரால் குறிப்பிடப்படுகின்றது.

விபுலாநந்தரின் கற்பித்தல் முறைகள் பற்றிய கருத்துகளில் உளவியல் ரீதியான படிமுறை வளர்ச்சியிலடைந்த பயனுள்ள தன்மையை ஏற்படுத்தும், மாணவரில், தெய்வீகத் தன்மையை வெளிக்கொணரும் வகையில் கற்பித்தல் முறை அமைய வேண்டுமென்ற உள்ளார்ந்த உயர்கருத்து நிறைந்திருப்பதைக் காணமுடியும். பண்டைக் கீழைத்தேயக் கல்வி கலை அம்சங்களுடன் மேலைத்தேய அறிவியலையும் சேர்த்து ஒன்றிணைத்து. ஒரு பரந்த செயன் முறையில் பழமையையும் புதுமையையும் இணைக்கும் பாலமாகக் கல்வி புதுப் பரிமாணம் பெறவேண்டுமென்பதே விபுலாநந்தரின் முக்கியகருத்தாகும். அடிகள் நம்மத்தியில் இன்னும் சிறிது காலம் வாழ்திருப்பாரேயாகில், அவரால் நமது சமுதாயம் மேலும் நலனடைந்திருப்பதுடன் குறிப்பாகத் தமிழ் மக்களது கல்வி வாழ்வு நல்வழியில் சிறப்பாற்றுப்படுத்தல் பட்டிருக்கும்.

Swami Vipulananda:

# A life-sketch of a great Tamil Scholar

— by K. S. Sivakumaran —

The centenary of the birth of a Thamil scholar-Swami Vipulananda-falls this year (1992) There seems to be some doubt as to what his actual date of birth had been, but most people had hitherto considered that March 29, 1892 was the day he was born. A village called Karaitivu, in the Ampara district in the eastern region of Shri Lanka was his birth place. His real name was Mylvaganam, but since his ordination as a monk of the Ramakrishna Mission, he became to be called Swami Vipulananda.

He had his early education at the Kalmunai Methodist English school and later at St. Michael's College, Batticaloa. Having passed the Senior Cambridge Examination, he joined his Alma Mater, as a teacher. Later he trained himself as a fully-fledged teacher at the Batticaloa Training College. He not only acquainted himself with the ancient Thamil literature, but also developed a knack for learning science in depth. Thus he followed a Diploma Course in science at the Colombo Technical College. Not satisfied with the above qualifications, Mylvaganam wanted to further his studies abroad. He sat for the highly recognised examination for the Thamil Pandits held by the Madurai Tamil Sangam in Tamilnadu, India in 191 . He was the first Shri Lankan to have been allowed to sit for this examination Needless to say, he passed the examination with flying colours.

From Batticaloa, Mylvaganam moved on to Jaffna. He began a career, as a teacher again, at St- Patrick's College. However he pursued his higher studies privately. He obtained his B. Sc degree from the London University in 1920. Judging his qualifications and freshness of outlook, he was offered the post of Principal at Manipay Hindu College. He held his position till 1922 and later opted to join the Ramakrishna Mission as Swami.

He was admitted as a member of the Prabodha Chaitanaya sector at the Madam at Mylapore in Madras, Tamilnadu. He remained there for two years and later was appointed the editor of 'Vedanta Kesari', an English journal, published by the 'Ramakrishna Mission. He also edited 'Ramakrishna Vijayam' another journal published by the Mission.

Having exhibited his talents as a scholar with a fresh insight Swami Vipulananda began to write serious articles on Thamil Literature. 'Chenthamil' a journal of high repute began to publish his article. His special knowledge in English. Thamil and Science came to be reflected in his scholarly articles. He wrote a number of critical essays on Shakespeare's plays. These are collected in a book called 'Madanga Soola Mani. Marvellous translations of English poetry into Thamil can be found in this collection.Swami Vipulananda returned to Shri Lanka and organised the educational activities of the Ramakrishna Mission and participated in many religious and literary conferences here. The Annamalai University is a prestigious seat of higher learning Thamilnadu. The university wanted to create a chair for Thamil and invited Swami Vipulananda to be the university's first professor in Thamil. He was the obvious choice for the post. There was no department of Thamil in any Indian universities before this and thus Swami Vipulananda was the the first professor in Thamil in the Thamil speaking world. This happened in 1931. It was a great honour for a Shri Lankan.

Swami Vipulananda earned the admiration of Thamil scholars in India. His scientific approach paid dividends. It was while he was in Thamilnadu that Swami Vipulananda began his research into ancient music of the Thamilians. His efforts materialised in producing his Magnum Opus the 'Yarl Nool'. This is a scientific study of the composition of an ancient musical instrument called 'Yarl' which resembled the lyre of the ancient Greeks.

Swami Vipulananda returned to Shri Lanka in 1934 and got himself involved in the educational activities of the Ramakrishna Mission. But he had to go to India again in 1939, as he was appointed the editor of 'Prabuddha Bharatha' published by the Ramakrishna Mission in a Himalayan region. He served there for two years editing this influential journal in English. He introduced to the English- speaking world the essence of Thamil literatures. music, religion etc. through his scholarly essays.

Shuttling between Shri Lanka and India, Swami Vipulananda had finally returned to Shri Lanka to head the department of Thamil in the University of Ceylon in 1943. The Senior professors in Thamil in our universities were in fact the students of Swami Vipulananda. It was he who directed the course of Thamil studies in Shri Lanka. He was indeed a pioneer in innovating new approaches to Humanities and Science.

In fact, he was the father of Literary Criticism in Thamil, a point which the writer of this sketch, has developed elsewhere. (A publication by the Deapartment of Hindu Culture and Thamil Affairs) Swami. Vipulananda died of sickness at a relatively young age of 55.

His individual contributions in various fields should be evaluated seperately.

March 01-1992

21, Murugan Place, Colombo - 6.

# திருக்கோணமலை ப.நோ.கூ. சங்கம்
## (வ-து)
திருக்கோணமலை.

விபுலாநந்தர் நாமம் என்றும் வாழ்க!

உங்கள் குடும்பத்திற்கு தேவையான தரமான பொருட்களை மொத்தமாகவும். சில்லறையாகவும் வழங்கி வந்த நாம்:-

**இன்று ——>**

ரிச்சர்ட் பீரிஸ் மோட்டார் கம்பனியின்

- ★ **பஜாஜ் திறீவீலர் ("Bajaj Autoriksha")**
- ★ **பஜாஜ் M80 மோட்டார் சைக்கிள்**
- ★ **பஜாஜ் ஸ்கூட்டர்**
- ★ **பஜாஜ் RTZ (KB100) மோட்டார் சைக்கிள்**

ஆகியவற்றின் ஏக விநியோகஸ்தர்களாகவும் உள்ளோம்

அத்துடன் சூட்கேஸ் பெட்டிகள், கண்ணாடி இழைகளாலான (Fibre Glass) கதிரை, மேசை ஏனைய உபகரணங்களையும் உற்பத்தி செய்கின்றோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

எனவே உங்களின் சகல தேவைகளுக்கும், இன்றே விஜயம் செய்யுங்கள்.

திருக்கோணமலை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கும்
அதன் கிளைகளுக்கும்.

## TRINCOMALEE M.P.C.S (LTD.)
TRINCOMALEE.


ஸ்ரீ கணேச அச்சகம், திருக்கோணமலை.